# அன்பச்

# சகோதரிகளே!




The Seven Women

Architects Of Redemption

# அன்புச் சகோதரிகளே!

## The Seven Women
## Architects Of Redemption

*by Todd Alexander*

**FFNC**
**Publications**

# முன்னுரை

பிரியமான சகோதர சகோதரிகளே! நாம் இன்றைக்கு உலகமே பெருமூச்சு விட்டு வருகின்ற ஒரு காலப்பகுதியில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அதை உங்களால் உணர முடிகின்றதா? இந்த யுகத்தின் முடிவில் நாம் அனைவரும் மூச்சை அடக்கிப் பிடித்துக் காத்திருக்கும் ஒரு நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். தலைப்புச் செய்திகளில் அதை நாம் உணர்கிறோம். பொருளாதாரத்தில் அதை உணர முடிகின்றது. நம் அண்டை வீட்டாரின் கண்களில் அதை நாம் காண்கிறோம். நம் இல்லங்களிலும் அதை உணர முடிகின்றது. நம் சமூகத்தின் அஸ்திபாரங்கள் ஆடிக்கொண்டிருக்கின்றன.

முன்னெப்போதைக்காட்டிலும் உலகம் மிகவும் பலவீனமடைந்து காணப்படுகிறது. ஓர் அலமாரியின் விளிம்பில் அசைவாட்டம் காணும் கண்ணாடிக் குவளை போல அது ஆடிக்கொண்டு இருக்கிறது. இஸ்ரயேல் எழுவதையும், இராஜ்யங்கள் விழுவதையும் நாம் காண்கிறோம்.

ஆனால்! புறமத உலகம் இருளில் காத்திருக்கும்போது ஒளியில் நடந்திட்ட முதல் தலைமுறை நாம் அல்ல என்பது உங்களுக்குத் தெரியுமா! மிகப்பெரிய மாற்றத்தின் விளிம்பில் நிற்கின்ற முதல் தலைமுறையும் நாமே என்று நினைக்க வேண்டாம்!

ஆம்! அவர்கள் வேறு யாருமல்ல, ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு, எகிப்தில் சிறைப்பட்டுக் கிடந்த இஸ்ரயேல் ஜனங்களே அந்தத் தலைமுறையாகும்! அவர்கள் எகிப்தின் இருளில் காத்திருந்தார்கள். அங்கே அவர்கள் நசுக்கப்பட்டார்கள். மரணத்தை வியாபாரமாகக் கொண்டிருந்த அந்தப் பேரரசின் காலடியில் இஸ்ரயேல் புத்திரர் நசுக்கப்பட்டுக் காணப்பட்டனர். பண்டைய உலகின் மாபெரும் வல்லரசாக எகிப்து தேசம்

திகழ்ந்தது. அது அடிமைகளின் முதுகின் மேல் கட்டப்பட்ட நாகரிகமாகும் – என்னதான் அத்தேசம் சூரிய வழிபாட்டிற்கென்று அர்ப்பணிக்கப்பட்டிருந்தாலும், அது ஆவிக்குரிய இருளில் முற்றிலும் மூழ்கிக் கிடந்தது. இவற்றையெல்லாம் மீண்டும் நாம் நம் நினைவுக்குக் கொண்டு வருவோமாக!

ஒடுக்கப்பட்ட இஸ்ரயேலர்கள் ஒரு மீட்பருக்காகக் கதறினார்கள். அவர்கள் தங்கள் கடுமையான ஆளோட்டிகளின் கீழ் வேதனையில் முனகிக் கொண்டிருந்தார்கள். இறுதியாக, தேவன் அவர்களின் கூக்குரலுக்குப் பதிலளித்து, **ஒரு பெரிய மீட்பு பணியைத் தொடங்கியபோது, அது நியாயப்பிரமாண உடன்படிக்கை பாதைக்கு நேராய் அவர்களை வழிநடத்தியது.**

ஆனால், தேவன் இதைச் செய்தபோது, அதை அவர் ஓர் அக்கினி இரதம் கொண்டு தொடங்கவில்லை. உருவின பட்டயங்கள் ஏந்திய தூதர்சேனை ஒன்றினையோ, நிலநடுக்கத்தையோ அல்லது மின்னலையோ அவர் அனுப்பவுமில்லை – மாறாக … … மாறாக … … மாறாக

**“ஏழு ஸ்திரீகள் அடங்கிய**
**ஒரு வட்டத்தைக் கொண்டே அவர்**
**அதனைத் தொடங்கினார்.”**

தேவன் மோசேயின் வாழ்க்கையைச் சுற்றி ஒரு பாதுகாப்புப் பேழையாக ஏழு பெண்களை வைத்தார். **அந்த ஏழு பெண்கள் இல்லையென்றால் மோசே இல்லை, மோசே இல்லையென்றால் யாத்திராகமம் இல்லை, யாத்திராகமம் இல்லையென்றால் இஸ்ரயேல் இல்லை, இஸ்ரயேல் இல்லையென்றால் மேசியாவே இல்லை!**

இப்போது, நாம் அங்கேயிருந்து, நமது நினைவலையில்,

பல நூற்றாண்டுகள் முன்னோக்கிக் கடந்து செல்வோமாக – அங்கே மீண்டும் புறமத உலகம் நசுக்கப்பட்டுக் கொண்டிருந்தது. இந்த முறை பார்வோனால் அல்ல, மாறாக, உரோமின் இரும்புக்கரத்தினால் நசுக்கப்பட்டுக் கொண்டிருந்தது. உரோமப் பேரரசின் ஒரு பகுதியோ பராக்கிரமங்களைச் செய்து வந்தது. அது சாலைகளை அமைத்தது. பேரரசில் ஒழுங்கைக் கொண்டு வந்தது. இருப்பினும், அது நசுக்கும் ஆவிக்குரிய பாரத்தையும் கொண்டு வந்தது. அப்போது தேவன் என்ன செய்தார் தெரியுமா? **அவர் கிருபையின் உடன்படிக்கைக்கான பாதையில் – "தமது குமாரனின் ஈடுபலி" – என்ற மற்றொரு மீட்பு பணியைத் தொடங்கினார்.**

அங்கே, இயேசுவைச் சூழ்ந்தும், இயேசுவை ஆதரித்தும், இயேசுவுக்கு நிதி உதவி செய்தும், இயேசுவுக்காகத் துக்கமடைந்தும் காணப்பட்ட தேவனுடைய அந்த மீட்பு பணியின் கட்டமைப்பை நாம் சற்று உற்றுக் கவனித்தோமேயானால், அங்கே

**"தேவன் வேறே ஏழு ஸ்திரீகள்
அடங்கிய ஒரு வட்டத்தை
ஏற்படுத்தியிருந்தார்."**

இன்று நாம் வரலாற்றின் இந்த இரண்டு தருணங்களுக்கு இடையே தெளிவாக வேறுபடுத்திப் பார்க்கப்போகிறோம். தேவன் தமது நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு ஏற்பாடுபண்ணி செயல்படுத்திய இந்த இரண்டு குழுக்களைச் சேர்ந்த ஏழு பெண்களைப் பற்றி நாம் இங்கே பார்க்கப்போகிறோம். **பயமுறுத்தும் அந்தகாரத்தைக் கண்டு அஞ்ச மறுத்திட்ட பெண்களின் முதுகின் மேல் தேவன் தமது இராஜ்யத்தை எவ்வாறு கட்டினார் / கட்டுகிறார் என்பதற்கான பாடங்களை நாம் இப்போது வெளிக்கொணரப் போகிறோம்.**

# "ஏசர்"

பிரியமான சகோதர சகோதரிகளே! இந்தப் பெண்களைப் பற்றி தியானிப்பதற்கு முன்பாக, முக்கியமான வார்த்தை ஒன்றின் பொருளைத் தியானித்து நாம் நம் பாடத்தைத் தொடங்குவோமாக. ஆதியாகமம் 2:18 - இல், தேவன் ஆதாமைக் குறித்து, இவ்வாறு கூறுகிறார்: "**பின்பு தேவனாகிய கர்த்தர்: மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை (help meet) அவனுக்கு உண்டாக்குவேன் என்றார்.**"

அவர் மீண்டும் இதே வார்த்தையை 20-ஆம் வசனத்திலும் பயன்படுத்துகின்றார். "**அப்படியே ஆதாம் சகலவித நாட்டுமிருகங்களுக்கும், ஆகாயத்துப் பறவைகளுக்கும், சகலவிதக் காட்டுமிருகங்களுக்கும் பேரிட்டான்; ஆதாமுக்கோ ஏற்ற துணை (help meet) இன்னும் காணப்படவில்லை.**"

தேவன் ஆதாமுக்கு ஏற்ற ஒரு துணையைக் கொடுத்த போது, அவர் அவருக்கு ஓர் உதவியாளரையோ (assistant), ஒரு செயலாளரையோ (secretary) அல்லது ஒரு பணியாளையோ (servant) தருவதாக வாக்குறுதி அளிக்கவில்லை. அவர் எபிரேய மொழியில் "ஏசர்" (Ezer) என்று அழைக்கப்படும் துணையையே அவருக்கு வாக்குறுதி அளித்திருந்தார். இந்த "ஏசர்" என்ற எபிரேய வார்த்தை, நம் காலத்தில் ஒரு குழந்தை, கேக் சுடுவதற்கு உதவுவது போன்ற ஒரு சாதாரண 'உதவியாளர்' (helper) என்பதைக் குறிக்கும் வண்ணமாக நீர்த்துப்போகச் செய்யப் பட்டுள்ளது. ஆனால் மூல எபிரேய பாஷையிலோ இது **'கூடுதல் இராணுவ வலு சேர்த்தல்'** (Military Reinforcement) எனும் அதிக வலுவான அர்த்தத்தைக் கொண்ட வார்த்தையாகக் காணப்படுகிறது.

சங்கீதங்களில் தேவனையே விவரிக்கப் பயன்படுத்தப் படும் வார்த்தைதான் இந்த 'ஏசர்.' **சங்கீதம் 33:20** இவ்வாறு கூறுகிறது: "நம்முடைய ஆத்துமா கர்த்தருக்குக் காத்திருக்கிறது; அவரே நமக்குத் துணையும் (help) நமக்குக் கேடகமுமானவர்."

ஆபிரகாமின் வீட்டுப்பொறுப்பாளனாகிய எலியேசர் (Eliezer) என்பவரது பெயரிலும் இதைக் காண்கிறோம். எலியேசர் என்ற பெயரின் அர்த்தமே "தேவனே (என்) துணை" என்பதாகும்.

இப்படியாக, ஆதாமின் ஏவாளுக்கும், தேவனை விவரிக்கும் பதத்திற்கும் இடையிலான அந்த முரண்பாட்டைச் சற்று சிந்தித்துப் பார்க்கலாம். 'தேவன் நமக்கு துணை செய்கிறார்' என்று சொல்லப்பட்டுள்ள வார்த்தையானது, அவர் நமக்குக் கீழ்ப்பட்டவர் அல்ல என்பதையே அர்த்தப்படுத்துகிறது. நிச்சயமாக இல்லை! அவர் நம் மீட்பராவார்!

இதன் பொருள் என்னவென்றால், தேவன் மனுஷியை ஒரு 'ஏசர்' ஆகப் படைத்தபோது, அவர் ஒரு தெய்வீக மாதிரியையே (divine pattern) அவளில் பதியச் செய்திருந்தார். அந்தத் தெய்வீக மாதிரி என்பது பொறுப்புணர்வுடன்கூடிய வலிமையைக் குறிக்கிறது (strength coming alongside responsibility).



பலவீனமானவள் என்பதால் அவள் ஏசர் என்று அழைக்கப்படவில்லை. மாறாக, அந்தப் பணி மனிதன் மட்டும் தனியாக சுமக்க முடியாத அளவுக்குப் பாரமானது என்பதால் அவள் ஏசர் என்றழைக்கப்படுகிறாள். ஆதாமிற்கு ஏற்ற துணையாக ஏவாளைத் தேவன் படைத்ததன் நோக்கமே இதுதான் என்று நான் நினைக்கிறேன்.

அதனால்தான் தேவன் தம்முடைய இரண்டு மாபெரும் மீட்பு பணிகளாகிய விடுதலை யாத்திரையையும் (Exodus), சுவிசேஷத்தையும் (Gospel) தொடங்கியபோது, அவர் மோசேயைச் சுற்றிலும்சரி, இயேசுவைச் சுற்றிலும் சரி, பெண்களை – ஏசர்களை (Ezers) – உற்ற துணைகளாக வைத்தார். அவர்கள் மோசேயையும் இயேசுவையும் ஆதரித்துத் தாங்கிப் பிடித்தவர்களாக மாத்திரம் இராமல், அவர்கள் உண்மையில் செயல் வீராங்கனைகளாக இருந்தனர்! அவர்கள் தேவனுடைய மீட்பு பணியில் தங்களுக்கான பங்கினைத் திறம்பட செய்தார்கள்; மேலும் அவர்கள் தேவனுடைய வேலையை – அந்த மகத்தான மீட்பு பணியை மும்முரமாய் முன்னோக்கி நகர்த்தியும் சென்றனர். அவர்கள் ஏதோ ஒரு கதையின் ஓர் இரண்டாம் நிலை கதாபாத்திரங்கள் அல்ல. மாறாக, **அவர்கள் தேவனால் நியமிக்கப்பட்ட பலவான்கள் ஆவார்கள் - அவர்கள் இல்லாமல் கதை முன்னோக்கியே நகராது எனும் ஸ்தானத்திலேயே காணப்பட்டனர்.**

மோசேயின் வாழ்க்கையில் ஏழு பெண்கள் இடம் பெற்றிருந்தனர், இயேசுவின் வாழ்க்கையிலும் ஏழு பெண்கள் இடம்பெற்றிருந்தனர். இவர்களை ஒருவரோடொருவர் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, ஒரு மாதிரியை (pattern) நம்மால் அடையாளம் காண முடிகிறது.

இப்படியாக, அக்காலத்தைப் போலவே, இக்காலத்திலும் இந்தச் சுவிசேஷ யுகத்தின் முடிவில் வாழ்ந்துகொண்டிருக்கும்

எனதருமை அன்புச் சகோதரிகளே, தேவன் உங்களையும் அழைக்கிறார் என்றே நான் விசுவாசிக்கிறேன்.




முன்புபோலவே பலவீனமாயும், விழுந்துபோயும் கிடக்கும் நமது இன்றைய உலகில் அதே போன்ற அடிப்படை கட்டமைப்பாளர்களாக இருப்பதற்கு நம் தலைமுறை பெண்களையும் தேவன் அழைக்கிறார் என்பதை நாம் நன்கு மனதில் பதிய வைக்கலாம் பிரியமானவர்களே!

ஆனால், இந்த ஒப்பீட்டிற்குள் நாம் நுழைவதற்கு முன்பாக, ஆயத்தமாகக் காணப்படும் பாத்திரம் (The principle of a prepared vessel) என்ற தத்துவத்தைப் பற்றி நான் பேச விரும்புகிறேன்.

இப்போது... பெண்களாகிய உங்களிடமே நான் நேரடியாகப் பேசுகிறேன். இவர்களுடைய குறிப்பிட்ட கதைகளை நாம் பார்ப்பதற்கு முன்பாக, ஏன் இந்தக் குறிப்பிட்ட பெண்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்பதைச் சற்று சிந்தித்துப் பார்க்கலாமா?!

வேதாகமத்தில் நாம் காணும் ஒரு தத்துவம் என்னவென்றால், **தேவன் தம்முடைய உயர் மின்னழுத்த சக்தியை** (High voltage power) **பழுதான மின் இணைப்புகளுக்குள்** (Faulty wiring) **செலுத்துவதில்லை - அவர் மணல் அஸ்திபாரத்தின் மேல் தம்முடைய இராஜ்யத்தைக் கட்டுவதே இல்லை என்பதேயாகும்.**

**அப்போஸ்தலர் 6:3** – ஆம் வசனம் அதற்கு சரியான ஓர் உதாரணமாகும். **அப்போஸ்தலர் 6** – ஆம் அதிகாரத்தில், ஆதிகால சபைக்கு, பந்திகளில் பணிவிடை செய்ய உதவிக்காரர்கள் தேவைப்பட்டபோது, அப்போஸ்தலர்கள் ஏதோ காலி இடத்தை நிரப்ப வேண்டும் என்பதற்காக நபர்களை முன்வரும்படி கேட்டுக்கொள்ளவில்லை. ஏதோ வேலை இல்லாமல் நிறைய ஓய்வு நேரம் இருந்த தன்னார்வலர்களை அவர்கள் கேட்கவில்லை. மாறாக, உதவிக்காரர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய அளவுகோல்களைப் பற்றி **அப்போஸ்தலர் 6:3** – ஆம் வசனம்: "**ஆதலால் சகோதரரே, பரிசுத்த ஆவியும் ஞானமும் நிறைந்து, நற்சாட்சி பெற்றிருக்கிற ஏழுபேரை உங்களில் தெரிந்துகொள்ளுங்கள்; அவர்களை இந்த வேலைக்காக ஏற்படுத்துவோம்**" என்றே கூறுகிறது.

ஆக, இங்கே உள்ள இரகசியம் என்னவென்றால், **தேவன் முதலில் பிரியப்படுவது குணலட்சணமே ஆகும்** – அது ஆண்களாக இருந்தாலும் சரி, பெண்களாக இருந்தாலும் சரி!

அவர் முதலில் தேடுவது குணலட்சணமே. பணிவிடை /ஊழியம் என்பது அதற்கு அடுத்தபடியாகவே வருகிறது. பணிவிடை/ ஊழியம் என்பது ஏதோ திறமையின் (Capability) விளைவாக வருவதல்ல. மாறாக, அது முதலில் நமக்குள் என்ன நடக்கிறது என்பதன் விளைவாகவே வருகிறது – உள்ளான குணலட்சணத்தின் விளைவாகவே புறம்பான ஊழியம் கடந்து வருகிறது. ஆம்! சுவிசேஷப் பணியில் ஈடுபடுவதற்கு அவர்களுடைய குணலட்சணமே அடிப்படை முன்நிபந்தனையாக இருந்தது.

இந்த 14 பெண் 'ஏசர்களுக்கு,' அதாவது தைரியமான இப்பாதுகாவலர்களுக்கும் கூட இந்த முன்நிபந்தனை பொருந்தியது. அவர்கள் ஏதோ தற்செயலாக உருவான கதாநாயகிகள் / வீராங்கனைகள் அல்ல; நீங்கள் வேதாகமத்தை உன்னிப்பாகக் கவனித்தால், இது சம்பந்தமாக சில அற்புதமான விஷயங்களை நம்மால் அடையாளம் காண முடியும்.

அவர்கள் வெளியரங்கமான பலத்த செயல்கள் செய்த பெண்களாக மாறுவதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே, அவர்கள் தங்கள் மறைவான ஜீவியத்தில் உண்மையுள்ள பெண்களாக (Women of hidden faithfulness) இருந்தவர்களாவார்கள்.

எனவே, இந்தத் தருணத்தில் நமக்கான பாடம் என்ன வென்றால்: சுவிசேஷப் பணியில், தனிப்பட்ட ஜீவியத்தில் உண்மையுள்ளவர்களாக ஜீவிக்கையில், வெளியரங்கமான பணியில் வல்லமையோடு செயல்பட முடியும் என்பதாகும்.

**"தனிப்பட்ட ஜீவியத்தில் உண்மையுள்ளவர்களாக ஜீவிக்கையில், வெளியரங்கமான பணியில் வல்லமையோடு செயல்பட முடியும்."**

**("Public power is the overflow of private faithfulness")**

உதாரணத்திற்கு, இயேசுவின் தாயாகிய மரியாளை எடுத்துக்கொள்ளலாம் - அவர் ஏதோ ஒரு குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படவில்லை. அதேசமயம், அவர் ஒரு பெண்ணாக இருந்தார் என்கிற காரணத்திற்காகவும் தேர்ந்தெடுக்கப் படவில்லை. சுவிசேஷப் பதிவுகளில் அவரைப் பற்றி எந்தவொரு பதிவுகளும் பதிவாவதற்கு முன்பே, காபிரியேல் தூதன் அவரை "**கிருபை பெற்றவளே, ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப் பட்டவள்**" என்றழைத்தார். **ஏன்? ஏனென்றால், நாசரேத்தூரின் அமைதியான ஜீவியத்தில், மரியாள் ஏற்கெனவே யேகோவா தேவனுக்கு முழுமையாகக் கீழ்ப்படியும் ஓர் இருதயத்தை வளர்த்தியிருந்தார்.** அவருடைய குணாதிசயமானது ஏற்கெனவே தேவனுடைய வார்த்தையின்படி கட்டமைக்கப்பட்டிருந்த ஒரு குணாதிசயமாகக் காணப்பட்டபடியால், மேசியாவை வளர்க்கும் அந்த அசாத்தியமான பணிக்கு அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். மனுக்குல வரலாற்றில் யாருக்கும் கிடைக்காத பாக்கியத்தை அவர் பெற்றுக் கொண்டார்

தைரியமான இப்பாதுகாவலர்களைப் பற்றி நாம் அறிந்து கொள்ள முற்படும்போது, "அவர்கள் என்ன செய்தார்கள்?" என்று மாத்திரம் வினவாமல், "**தேவன் தமது வல்லமையிலும் ஊழியத்திலும் பயன்படுத்திய அந்த ஸ்திரீகள் யார்? அவர்கள் எப்படிப்பட்டவர்கள்?**" என்பதையும் யோசித்துப் பார்ப்போமாக.

**நம்முடைய அருமையான சகோதரிகளும் இந்த இறுதி நாட்களில் இயேசுவுக்காய் ஊழியம் செய்ய விரும்பினால், அவர்கள் முதலில் தங்கள் தனிப்பட்ட ஜீவியத்தில் உண்மையுள்ள பெண்களாக ஜீவிக்க வேண்டும்** என்பதை இந்தத் தைரியமான பாதுகாவலர்களாகிய 'ஏசர்கள்' நமக்குக் கற்பிக்கிறார்கள் என்றே நான் நம்புகிறேன்.

இப்போது, முதலில் ஒப்பிட்டுப் பார்க்கப்படும் ஜோடியைக் குறித்துப் பார்க்கலாம்.

இவர்களை நாம் மரணத்தை எதிர்த்து நின்றவர்கள் (The defiers of death) என்று அழைக்கலாம்.

## 1. மரணத்தை எதிர்த்து நின்றவர்கள்

அடுத்த அடி எடுத்து வைப்பதே சிரமம் எனும் அளவிற்கு நிலைமை கடினமாகும் போது ஒரு 'ஏசர்' (Ezer) எப்படி இருப்பாள், எப்படிச் செயல்படுவாள் என்பதை நாம் இதிலிருந்து கற்றுக் கொள்ளலாம்.

நாம் பெரியவர்களாக வளர்ந்த பிறகு கற்றுக்கொண்ட ஒரு விஷயம், வாழ்க்கை உண்மையில் மிகவும் கடினமான ஒன்று என்பதாகும். வாழ்க்கை மிகவும் சவாலானது, அது நாம் எதிர்பார்த்தபடி இருப்பதில்லை. **ஆனால், தேவனுடைய வார்த்தையில் நாம் ஊன்ற பெற்றிருக்கும் அந்த நங்கூரம் மட்டுமே, நமது மீண்டு வரும் திராணியை (resilience) நிலை நிறுத்தும் ஒரே விஷயமாக உள்ளது.**

**சிப்பிராள் பூவாள்** என்னும் பேருடைய எபிரெய மருத்துவச்சிகளே நாம் முதலில் பார்க்கப்போகிற 'மரணத்தை எதிர்த்து நின்ற' ஜோடி ஆவார்கள். இவர்களை நம்மால் இயேசுவின் சிலுவை மரணத்திற்குச் சாட்சிகளாக நின்ற **மகதலேனா மரியாள்** மற்றும் **கிலெயோப்பா மரியாளோடு** ஒப்பிட முடியும்.

அந்த யாத்திராகம கதையானது ஒரு மரண தண்டனையுடனே ஆரம்பமாகிறது. பூமியின் மிகவும் சக்திவாய்ந்த மனிதனாகக் காணப்பட்ட பார்வோன், தமக்கு முன்பாகப் பெருகி

காணப்பட்ட இஸ்ரயேலர்களின் ஜனத்தொகையைக் கண்டு பயந்துதான் போயிருந்தான்.

நம்முடைய நாட்களிலும் நம் மத்தியில் நிலவும் ஒரு விஷயம் தானே இது? **பயம்!**

இப்படிப் பயந்துபோயிருந்த பார்வோனோ, எபிரேய ஆண் பிள்ளைகளை நைல் நதியில் போட்டுச் சாகடிக்கும்படிக்குக் கட்டளையிட்டான். இது அரசாங்கத்தாலேயே அங்கீகரிக்கப்பட்டு, செயல்பாட்டுக்கு வந்த ஓர் இனப்படுகொலையாகும். அந்தத் தேசத்தின் சட்டம் 'மரணம்' என்பதாக மாற்றப்பட்டது. அந்தக் கலாச்சாரம் முழுவதுமாக மரணத்திற்காக அர்ப்பணிக்கப்பட்டது.

ஆனால், அந்தப் பயங்கர பேரரசுக்கும், மாசற்ற பச்சிளங் குழந்தைகளுக்கும் இடையில் வாசலில் நின்றவர்கள் **சிப்பிராள் பூவாள்** என்ற இரண்டே இரண்டு பெண் மருத்துவச்சிகளே! **யாத்திராகமம் 1 – ஆம் அதிகாரம், 15 முதல் 22 வரையிலான வசனங்கள்** இந்த இரண்டு பெண்களைப் பற்றி பின் வருமாறு குறிப்பிடுகின்றன –



**"மருத்துவச்சிகளோ, தேவனுக்குப் பயந்ததினால், எகிப்தின் இராஜா தங்களுக்கு இட்ட கட்டளைப்படி செய்யாமல், ஆண் பிள்ளைகளையும் உயிரோடே காப்பாற்றினார்கள்."**

இந்தச் சம்பவத்தில் உள்ள **காட்சி முரண்பாட்டைச் சற்று கற்பனை செய்து பாருங்கள்!** ஒரு புறத்தில் எகிப்தின் பராக்கிரம இரதங்கள், பிரம்மாண்ட கல் நினைவுச்சின்னங்கள், திரளான சேனை கூட்டங்கள் மற்றும் பார்வோனின் சர்வாதிகாரம் என்பவை காணப்படுகின்றன – அதாவது, ஒரு மாபெரும் சக்தி, ஒரு வல்லரசு காணப்படுகின்றது; மறுபுறமோ வெறும் இரண்டே இரண்டு சாதாரண பெண்மணிகள் காணப்படுகிறார்கள். அவர்களிடம் பயங்கர ஆயுதங்களும் இல்லை, சக்திவாய்ந்த அரசியல் பதவியும் இல்லை. மாறாக, **அவர்களிடம் அற்பமான துண்டுகள், வெதுவெதுப்பான நீர் மற்றும் ஒரு பாத்திரம் என்பவை தவிர வேறொன்றும் காணப்படவில்லை!! வேறொன்றும்…… காணப்படவில்லை!!!**

**சாதாரண இரண்டு பெண்மணிகள் சாதாரண பொருட்களைக்கொண்டு ஒரு மகா வல்லரசையே எதிர்கொண்டார்கள்! அந்த மகா வல்லரசும் தடுத்து நிறுத்தப்படுகிறது!!!! ஆச்சரியம்! ஆனால் உண்மை!**

ஆம், சகோதர சகோதரிகளே! ஒரு மகா வல்லரசையே நிறுத்திய அந்த மனோ தைரியம் நம்மை பெரிதும் … பெரிதும் … திகைப்படைய வைக்கிறது! பார்வோன் அவர்களை அழைப்பித்து, அவர்களிடமே முகமுகமாய் உத்தரவைப் பிறப்பித்தான், இருப்பினும் சிப்பிராள் பூவாள் இருவருமே “இல்லை! முடியாது!!” என்கிற ரீதியில் எதிர்த்து நின்றார்கள். சொல்லப்போனால், அவர்கள் பேரரசுக்கு எதிராக கீழ்ப்படியாமை இயக்கத்தில் (civil disobedience) ஈடுபட்டார்கள் என்றே நான் நினைக்கிறேன்.

**குழந்தைகளைக் காப்பாற்றுவதற்காக அவர்கள் இராஜாவைத் திசைதிருப்பினார்கள்.
அவர்கள் மரண தேவதைகளாக இருப்பதற்குப் பதிலாக, வாழ்வுதரும் தேவதைகளாக செயல்பட்டார்கள்!!!**

இப்பேர்ப்பட்டதைச் செய்யும்படிக்கான அந்த உறுதியான குணலட்சணம் என்னிடம்/நம்மிடம் இருக்குமா?! அது நாம் அந்தச் சூழலுக்குள் உட்படுத்தப்பட வேண்டிய நிலை வரும் வரை நமக்குத் தெரியாது பிரியமானவர்களே!

ஆனால், நொடிப்பொழுதில் சரியான முடிவை எடுப்பதற்கு எப்பேர்ப்பட்ட குணலட்சணத்தின் உறுதித்தன்மை தேவைப் பட்டிருக்கும் என்பதைச் சற்று சிந்தித்துப் பாருங்கள்! அந்தக் குணலட்சணத்தின் உறுதித்தன்மை என்பது ஏதோ நெருக்கடியான நேரத்தில் திடீரென உருவான ஒன்றல்ல! மாறாக, அந்த நெருக்கடிக்குள்ளாக அவர்கள் உட்படுத்தப்படும் போதே, அவர்கள் அந்தக் குணலட்சணத்தின் உறுதித்தன்மை யோடுதான் வந்தார்கள் என்று நான் நினைக்கிறேன்.

அவர்கள் வெளியரங்கமாகப் பயன்படுத்தப்படுவதற்கு முன்பு, தனிப்பட்ட ஜீவியத்தில் உண்மையுள்ளவர்களாக இருந்தார்கள். சிப்பிராள் பூவாள் இருவரும் பார்வோன் மீதான இம்மைக்குரிய பயத்தை விடவும் பன்மடங்கு மேலான கர்த்தருக்குப் பயப்படும் பயத்தை பல ஆண்டுகளாக வளர்த்தி இருந்திருக்க வேண்டும் என்றே நான் நினைக்கிறேன். அவர்கள் கர்த்தருக்குப் பயப்படும் பயத்தை வளர்த்திக் கொண்டார்கள், இந்த தேவ பயமே பார்வோன் மீதான மாம்சீக பயத்தை விடவும் பன்மடங்கு மேலோங்கி நின்றது. அவர்கள் சிறிய காரியங்களில் நேர்மையான ஸ்திரீகளாகக் காணப்பட்டார்கள். சிறிய விஷயத்தில் அவர்கள் காண்பித்த நேர்மை, மிக முக்கியமான காரியத்திலும் நேர்மையான பெண்களாக இருப்பதற்கு அவர்களுக்கு உதவியது.

இப்போது, இயேசுவின் வாழ்க்கையின் இறுதி கட்டத்திற்கு வரலாம். சிலுவையில் அறையப்பட்ட சம்பவத்தில், மற்றொரு வல்லரசு மீண்டும் தலை தூக்கியிருந்தது. ஆம்! உரோம்!

அந்தப் பேரரசு யூதர்களின் இராஜாவையும் கொலை செய்தது. சீஷர்கள் – வலிமையான வருங்காலத் தலைவர்கள், அவரை ஒருபோதும் விட்டு விலகமாட்டோம் என்று உறுதி கொடுத்தவர்கள் – அவர்களுமே பயத்தில் சிதறி ஓடினார்கள், அவர்களில் சிலர் பூட்டிய கதவுகளுக்குப் பின்னால் ஒளிந்து கொண்டார்கள்.

இப்போது, இந்த முழு அனுபவத்திலும், அவர்கள் சிலுவையின் மரணத் தீர்ப்பை (எல்லாமே முடிந்தது என்பதை) நிதர்சனத்தில் மனதளவில் ஏற்றுக்கொண்டவர்களாகக் காணப் பட்டிருக்கலாம். **அவர்கள் சிலுவையையும் கல்லறையையும் பார்த்துவிட்டு, இறுதியில் "மரணமே வென்றது!"** என்றுகூட நினைத்திருக்கலாம்.

நிச்சயமாக, அந்தப் பேரரசு, தேவனுடைய இராஜ்யத்தை விடவும் வலிமையானது என்பதற்கான ஆதாரங்களே அப்போது தென்பட்டன. பிலாத்துவுக்கும், ஏரோது இராஜாவுக்கும், அவனுடைய கூட்டாளிகளுக்கும்கூட அப்படித்தான் தோன்றியது.

ஆனால், இதன் அனைத்தின் மத்தியிலும், கல்லறைக்குச் சென்ற அந்த இரண்டு ஸ்திரீகளைப் பற்றி சற்று யோசித்துப் பார்க்கலாம். மகதலேனா மரியாளும், கிலெயோப்பா மரியாளும், சிப்பிராள் பூவாளைப் போலவே, மரணத்தின் முடிவை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார்கள்.

ஆண்டவருடைய மற்ற பின்னடியார்கள் சூழ்நிலையின் யதார்த்தத்தினிமித்தம் முடங்கிப் போயிருந்தபோது, இந்த இரண்டு மரியாள்களும் அவரது சரீரம் வைக்கப்பட்டிருந்த இடத்தை நோக்கி மெதுவாக நகர்ந்து சென்றார்கள். அவர்கள் உரோம காவலர்களை – அந்தப் புதிய பார்வோனின் காவலாளிகளைக் – கடந்து சென்றார்கள். "எல்லாம் முடிந்துவிட்டது" என்று மனித பொது அறிவு சொன்னபோது, அவர்களோ கல்லறையை நோக்கி நடந்தார்கள். இயேசுவின் மீதான அவர்களின் அன்போ மனித

பகுத்தறிவை விடவும் பலம்வாய்ந்ததாகக் காணப்பட்டபடியால், இயேசுவின் சரீரத்திற்குப் பூசுவதற்காக அவர்கள் சுகந்த வர்க்கங்களையும் தங்களோடு கொண்டு சென்றார்கள். இயேசுவின் மீதான அவர்களின் அன்பு உரோம சாம்ராஜ்யத்தின் மீதான பயத்தை விடவும் மிகுந்த பலம்வாய்ந்ததாகக் காணப்பட்டது.

இப்போது அவர்கள் ஒரு தனித்துவமான நிலைமையில் காணப்பட்டனர். ஆண்கள் போர்ச்சேவகரின் கேள்விக் குள்ளாக்கப்படும் சூழ்நிலை காணப்பட்டபோது, இந்த ஸ்திரீகளால் மற்றவர்களின் கண்ணில் படாமல் (under the radar) செயல்பட முடிந்தது. அப்பெண்களால் பொது பார்வைக்குத் தெரியாமல் திரைமறைவாக வேலை செய்யவும், யாருடைய கவனத்தையும் ஈர்க்காமல் செயல்படவும் முடிந்தது, இது சுவிசேஷ யுகத்தின் முடிவிலும் கூட ஒரு தனித்துவமான விசேஷித்த ஆற்றலாக (superpower) இருக்கும்.



இந்த இரண்டு மரியாள்களைப் பற்றி நாம் சிந்திக்கும்போது, **அச்சுறுத்தல்களைக் கண்டு அஞ்சுவதை விடவும் தேவனுக்கு அதிகம் அஞ்சும் ஓர் 'ஏசரையே'** நாம் காண்கிறோம். அவள் தனக்கான வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்பவளாய்க் காணப்படுகிறாள். **ஒரு மகா வல்லரசை விடவும்**

**தேவனுடைய வார்த்தைக்கே அவள் செவிசாய்த்தாள். அவளே தைரியத்துடன்கூடிய பாதுகாவலன் ஆவாள்!** சிப்பிராள் பூவாள் எனும் முன்மாதிரிகள் காண்பித்த அதே **உண்மைத்தன்மையை** இந்த இரண்டு மரியாள்களும் வெளிப்படுத்தியதால், அவர்களுக்கு இணையாக இவர்களை நாம் வைக்கிறோம்.

இந்த நால்வரும் இப்போது நம் மத்தியில் வாழும் சகோதரிகளுக்கு – சுவிசேஷ யுகத்தின் முடிவில் இருக்கும் நமது ஏசர்களுக்கு – முன்னுதாரணங்களாக இருக்கிறார்கள்.

ஒரு வகையில், இந்த நான்கு அருமையான தேவ பக்தியுள்ள பெண்களும் நமக்குக் கற்பிப்பது என்னவென்றால், தேவனுடைய ஸ்திரீகளின் முதல் பணி, நமது மரணக் கலாச்சாரத்தை (culture of death) எதிர்ப்பவர்களாக இருப்பதே ஆகும். நாம் ஒரு மரணக் கலாச்சாரத்தின் மத்தியில் வாழ்கிறோம். அவர்களும் அப்படியே வாழ்ந்தார்கள்.

இது இன்றைய காலக்கட்டத்தில் எப்படிப் பொருந்தும் என்பதற்கான ஒரு நடைமுறைப் பயன்பாடு இதோ: **ஒரு 'ஏசர்' என்பவர் உத்தரவு கிடைத்து, பின் உணர்வடைந்து செயல் படுபவராய் இருக்க மாட்டார். மாறாக, ஒரு 'ஏசர்' தன் பொறுப்பினை உணர்ந்து தானே மனமுவந்து உடனடியாகச் செயல்படுபவராக இருப்பார்.**

<u>**அவள் மனக்கண்களுக்கு உணர்த்தப்பட்டவுடனே, அவள் கையும் மெய்யும் இயங்க ஆரம்பித்துவிடும்! அவளே தேவனுடைய ஏசர்!!!**</u>

சுவிசேஷ யுகத்தின் அறுவடையில் இருக்கும் நம் சகோதரிகளாகிய 'ஏசர்களே!' நீங்கள் பட்டயம் ஏந்தி நிற்கும் ஒரு பார்வோனை எதிர்கொள்ளாமல் இருக்கலாம், ஆனால் நீங்கள் ஆவிக்குரிய வகையில் நம்மை சாகடிக்கச் செய்யும் ஒரு

கலாச்சாரத்தை எதிர்கொண்டு இருக்கிறீர்கள், அது முன்பு போலவே வீரியமிக்க ஒன்றாகவும் – அதே அளவு ஒடுக்குவதாயும் உள்ளது. அது நமது வீட்டின் ஒவ்வொரு மூலையிலும் கண்ணுக்குப் புலப்படாமல் நுழைந்து விடவும் செய்கிறது.

<u>ஆம்! சுவிசேஷ யுகத்தின் முடிவு என்பது அன்பு தணிந்து போகும் காலமாகும், குடும்பங்கள் சிதைந்து போகும் காலமாகும்.</u> உண்மையில் கள்ளம் கபடற்றத்தன்மை (innocence) படுகொலை செய்யப்பட்டு வருவதை நம்மால் கண்கூடாகக் காண முடிகிறது. உலகம் நம் சிறு அப்பாவி குழந்தைகளை இச்சிக்கிறது,

அச்சிறு பிள்ளைகளின்
மனங்களையும்,
உடல்களையும்,
ஆத்துமாவையும்
வெறிக்கொண்டு இச்சிக்கிறது.
இன்னுமாக அந்த
விலைமதிப்பற்ற சின்னஞ்சிறு
உயிரை வேட்டையாடவே
துடித்துக் கொண்டிருக்கிறது.



ஆனால் சுவிசேஷ யுகத்தின் 'ஏசரோ', தனது சொந்தக் குடும்பத்திற்குள் ஒரு மருத்துவச்சியாக இருப்பதன் மூலம், முதலாவது இயேசுவுக்கே ஊழியம் செய்கிறாள். உங்களுக்கு மாம்சீக குடும்பம் இல்லையென்றால், அது ஓர் ஆவிக்குரிய குடும்பமாகக்கூட இருக்கலாம். **சுவிசேஷ யுகத்தின் ஏசர் தனது மாம்சீக மற்றும் ஆவிக்குரிய குடும்பங்களுக்கு ஒரு மருத்துவச்சியாக ஊழியம் செய்கிறாள், அவளே தனது வீட்டின் கதவருகே நிற்கும் வாயிற்காவலன், அவள் அந்த மரணக் கலாச்சாரத்தைப் பார்த்து, "உனக்கு இங்கே அனுமதி இல்லை. இது உனக்கான வீடு கிடையாது!" என்று தைரியமாக எதிர்த்து நிற்கிறாள்.**

- ‘‘உங்கள் பிள்ளைகள் கவலையுடனும், மனப்பதற்றத்துடனும், ஒழுக்கத்தில் சீரழிவுடனும், அவநம்பிக்கையுடனும் காணப்படட்டும், தவறு ஒன்றும் இல்லை’’ என்று உலகம் சொல்லும்போது, குணசாலியான ‘ஏசர்’, ‘‘இல்லை. இந்த வீட்டில், நாங்கள் ஜீவனைப் பேசுகிறோம்!’’ என்று தைரியமாக எதிர்த்து நிற்பாள்.

- சமூக ஊடகங்களின் பரிந்துரைகள் (algorithms), உங்கள் மகள் [அழகில்லை அல்லது குறைபாடுகள் உண்டென்று அல்லது உருவக்கேலிக்கு ஆளாக்கப்பட்டு] தனது உடலை வெறுக்கக் கற்றுக்கொடுக்க முயற்சிக்கும்போது, ‘ஏசர்’ தாய் ‘‘இல்லை, நீ தேவனுடைய சிருஷ்டிப்பில் அருமையானதொரு கைவேலைப்பாடு’’ என்கிற உண்மையை எடுத்துரைப்பாள்.

- உலகின் சித்தாந்தங்கள் உங்கள் மகனை விஷமத்தனம் வாய்ந்தவன் என்ற மாயையை அவன் சிந்தையில் திணிக்க முற்படும்போது, ‘ஏசர்’ தாய் தேவ அங்கீகாரத்துடன் முன்வந்து, ‘‘இல்லை, நீ தேவனுடைய பார்வையில் மதிப்புமிக்க ஒரு வாலிபன்’’ என்று புத்திமதி கூறி அரவணைப்பாள்.



**ஆனால், இவற்றுக்கெல்லாம், <u>தைரியத்தோடு நிலைத்திருப்பது</u> (courageous consistency) எனும் குணாதிசயம் தேவைப்படுகிறது. அதாவது:**

- **குடும்ப வேலைகள் பரபரப்பாக இருக்கும்போதும், குடும்ப ஆராதனைக்கு முன்னுரிமை அளிப்பதே இதன் பொருளாகும்.**

- உலகம் அவர்களுக்கு மென்பொருள் திரைகளைக் (screens) கவர்ச்சிப் பொருளாகக் கொடுக்கும்போது, அதற்குப் பதில் உங்கள் குழந்தைகளுக்கு வேதாகமத்தைப் போதிப்பதே இதன் பொருளாகும்.
- சிப்பிராளும் பூவாளும் அந்தப் பச்சிளம் பிள்ளைகளுக்குக் காட்டிய அதே தீவிரப் பாதுகாப்போடுகூட, நீங்களும் உங்கள் துணைவர் அல்லது உங்கள் பிள்ளைகளின் ஆவிக்குரிய வாழ்க்கையைப் பாதுகாத்து வளர்த்தெடுப்பதே இதன் பொருளாகும்.

**சுவிசேஷ யுக அறுவடை காலத்தைச் சேர்ந்த எனதருமை சகோதரிகளே, இந்தப் பொல்லாத கலாச்சார மாற்றத்தின் மத்தியில் அதற்கு எதிராக நிற்கும் பாதுகாப்பின் முதல் வரிசை வீர மங்கைகள் நீங்கள்தான்!**

**ஆவிக்குரிய ஜீவியத்தின் மரணம் உங்கள் குடும்பத்தைக் கைப்பற்ற அனுமதிக்க மறுப்பவர்களும் நீங்கள்தான்!**

**தேவனுடைய சமிக்ஞையை/உந்துதலைப் (signal) புரிந்துகொண்டு உங்கள் வீட்டில் ஜீவனைத் தக்கவைப்பதும் நீங்கள்தான்!**

இப்போது இரண்டாவது ஜோடியைப் பார்க்கலாம், இந்த இருவரையும் நாணல்களுக்கு இடையே காணப்பட்ட கண்காணிகள் (The watchmen in the reeds) என்று நாம் அழைக்கலாம்.

## 2. நாணல்களுக்கு இடையே காணப்பட்ட கண்காணிகள்

இங்கே மோசேயின் குடும்பத்தைப் பார்க்கப்போகிறோம்.

அதில் அவரது தாய் யோகெபேத், அவரது மூத்த சகோதரி மிரியாம் ஆகிய இருவரும் முக்கிய பங்கு வகித்தார்கள்; இவர்கள் இயேசுவின் தாயாகிய மரியாள் மற்றும் சலோமே என்பவர்களோடு ஒருவிதத்தில் ஒப்பிட முடியும் என்று நான் நினைக்கிறேன்.

கடந்த சம்பவத்தில் மருத்துவச்சிகள் அந்த உத்தரவை மீறி செயல்பட்ட பிறகு, மோசே எனும் பாலகன் பிறந்தார். ஆனால், அப்பிள்ளையை என்றென்றும் மறைத்து வைக்க முடியாத சூழல் ஏற்பட்டது. என்ன நடக்கும் என்பதை நாம் அறிவோம்! ஒரு குழந்தை என்றால் அழும், அடம் பிடிக்கும், வளரும் அல்லவா! ஆபத்து ஒவ்வொரு நாளும் அதிகரித்துக் கொண்டே இருந்தது.

இப்போது இந்தக் கதையில், நம் இருதயத்தை உருக்கும் தருணம் ஒன்று வருகிறது. மோசேயின் தாயாகிய யோகெபேத் ஒரு நாணல் பெட்டியைச் செய்கிறாள். **அவள் அக்குழந்தையைக் காப்பாற்றுவதற்கான ஒரு சிறிய பேழையை உருவாக்குகிறாள்.** ஆம்! அவளுக்கு வேதவாக்கிய சரித்திரங்கள் தெரிந்திருந்தன! நோவா மற்றும் பேழையின் கதை அவளுக்குத் தெரிந்திருந்தது! அவள் முன் ஒரு நீர்நிலை தென்படுகிறது. மறுபுறம், தன் பிள்ளைக்கிருக்கும் ஆபத்தைப் பார்க்கிறாள். உடனே, ஒரு பெட்டியை ஏற்பாடு செய்து, அந்தப் பெட்டிக்கு பிசினும் கீலும் பூசி, தன் மகன் கொல்லப்பட வேண்டியிருந்த அதே நதியிலேயே அவனை அந்தப் பெட்டியோடு வைக்கிறாள்.

சற்று அந்தத் தருணத்தைக் கற்பனை செய்து பாருங்கள்! எகிப்திய சூரியனின் வெப்பம், நதிச் சேற்றின் வாசனை என்பவைகளைக் கற்பனை செய்து பாருங்கள். அந்த நீரோட்டத்தில் தன் கட்டுப்பாட்டிலிருந்த பெட்டியை வைக்கும்போது, யோகெபேத்தின் இருதயத்தில் இருந்த பயத்தைக் கற்பனை செய்து பாருங்கள்.

அந்த நேரத்தில், நைல் நதி அநேகமாக முதலைகளின்



இருப்பிடமாகவும், ஆபத்து நிறைந்ததாகவும் இருந்திருக்கும். ஆனால் யோகெபேத் தம் மகனை அப்படியே விட்டுவிடவில்லை. அவள் மோசேயின் மூத்த சகோதரி மிரியாமை அங்கே சற்றுத் தள்ளி கண்காணிப்பதற்காக நிறுத்துகிறாள்.

**யாத்திராகமம் 2:4** பின்வருமாறு கூறுகிறது: "**அதற்கு என்ன சம்பவிக்கும் என்பதை அறியும்படி அதின் தமக்கை தூரத்திலே நின்றுகொண்டிருந்தாள்.**"

அங்கு நிலவியிருக்கும் பதற்றத்தை உங்களால் உணர முடிகிறதா? நாணல்களுக்கு இடையே இருந்த அந்தப் பதற்றத்தை உங்களால் உணர முடிகிறதா? '**கூட இருப்பது / துணை நிற்பது**' (presence) என்பதன் பாடத்தை இங்கே உணர்ந்துகொள்ள முடிகிறதா? **யோகெபேத் தன் கட்டுப்பாட்டை தேவன்பேரில் ஒப்படைத்திருந்தாலும், அவள் தரிசனத்தைக் கைவிடவில்லை!**

இப்படியாக, என்ன பார்க்கிறோம் என்றால், மிரியாம் முதலைகளும் நாணல்களும் நிறைந்த பகுதியில் நின்று விழிப்பாய்க் கவனித்துக் கொண்டிருந்தாள். தேவனுடைய திட்டம் மூழ்கிவிடாமல் இருப்பதை உறுதி செய்யும் கண்காணியாக அவள் அங்கே காணப்பட்டாள். **யோகெபேத்தும் மிரியாமும் தங்கள் இருதயத்தில் முதலில் தேவன்பேரில் பயபக்தியாக இருந்தபடியாலும், சாத்தியமற்ற காரியங்களில் தேவனை**

நம்பினபடியாலும், அவர்களின் அந்தக் குணலட்சணத்தின் உறுதித்தன்மையானது (strength of character) அப்போது அங்கே செயல்படத் தொடங்கியிருந்தது.

### எப்பேர்ப்பட்ட விஷயம்!

### நாம் எத்தனை தரம், சாத்தியமற்ற (தேவ) காரியங்களைக் குறித்து தேவன்பேரில் நம்பிக்கை வைக்க வேண்டியுள்ளதல்லவா!

இந்த இருவருக்கும் வேதவாக்கிய சரித்திரங்கள் நன்கு பரிச்சயம் போலும், ஒரு சிறிய பேழையை உருவாக்கியதன் மூலம், தேவன் இரட்சிக்கும் விதத்தின் மாதிரியை அவர்கள் நன்கு அறிந்து வைத்திருந்தார்கள் என்றே நான் நினைக்கிறேன்.

இப்போது நமது பார்வையை அப்படியே கொல் கொதாவிற்குத் திருப்புவோமாக. அங்கே நதி இங்கே ஒரு சிலுவை! அங்கே கூடை இங்கேயோ சிலுவை மரமும் ஆணிகளும்!! மீண்டும் இம்முறையும் குமாரன் ஒருவர் மரணத்திற்கு ஒப்புக் கொடுக்கப்படுகிறார்!!!

அவரோடு இருந்த மற்றவர்கள் எங்கே? அப்போஸ்தலர்கள் எங்கே? ஆம்! அவர்கள் தப்பி ஓடியிருந்தார்கள். அவர்களால் அந்தக் காட்சியைக் காண முடியவில்லை. ஒருவேளை அவர்கள் ஒளிந்து கொண்டிருந்திருக்கலாம். ஆனால், இயேசுவின் தாயாகிய மரியாளும், யாக்கோபு யோவானின் தாயாகிய சலோமேயும் மாத்திரம் அந்த இருதயத்தைப் பிளக்கும் வேதனையைப் பார்த்துக் கொண்டு அங்கேயே நின்றிருந்தனர்.

### யோகெபேத் எப்படி மோசேயைத் தண்ணீரில் விடவேண்டியிருந்ததோ, அதேபோல் மரியாளும் இயேசுவை இரத்தத்திற்கு ஒப்புக்கொடுக்க

**வேண்டியிருந்தது. மிரியாம் எப்படி நாணல்களுக்கு இடையே நின்று கவனித்துக் கொண்டிருந்தாளோ, அதேபோல் சலோமேயும் சிலுவையில் அறையப்பட்ட இடத்தில் தரித்து நின்றாள்.**

அந்த விடாப்பிடியான மனவுறுதியை (tenacity) உங்களால் உணர முடிகிறதா? **இதுவே காரிருள் வேளை மத்தியிலும் காண்பிக்கப்படும் விடாப்பிடியான மனவுறுதியாகும். இது குணலட்சணம் உறுதிப்படுத்தப்படுவதன்** (character crystallizing) **ஒரு தொனியாகும்!**

வயதானவன் என்ற முறையில் எனக்குத் தெரியும், சுற்றிலும் அற்புதங்கள் ஆசீர்வாதங்கள் கிடைக்கும்போது இயேசுவின் மேல் விசுவாசம் வைப்பது என்பது ஒரு விதம். அப்படி என் வாழ்க்கையில் ஏராளமான அற்புதங்கள் நடந்துள்ளன; அப்போஸ்தலர்களின் வாழ்க்கையிலும் அப்பம் பன்மடங்காகப் பெருகியது, பார்வையற்றவர்கள் பார்வை அடைந்தனர், சப்பாணிகள் நடந்தனர் எனப் பெரிய பெரிய அற்புதங்கள் நிகழ்ந்தன. அற்புதம்! ஆச்சரியம்! சந்தோஷம்!

ஆனால், நீங்கள் நாணல்களுக்கு மத்தியில் நிற்பது போன்ற ஆபத்தான தருணத்தின் மத்தியிலோ அல்லது கொடுஞ்சிலுவையின் அடியில் நிற்பதுபோன்ற மனதை உடைக்கும் தருணத்தின் மத்தியிலோ, கண்முன் நடைபெறும் காரியங்களில் உங்களால் தலையிடவே முடியாது எனும் சூழலின் மத்தியிலோ, இயேசுவின் பரமபிதா என்ன செய்வார் என்பதை வெறுமனே நின்று பார்க்கத்தான் முடியும் என்கிற சூழலின் மத்தியிலோ **நீங்கள் விசுவாசம் காண்பிப்பது என்பது முற்றிலும் வேறொரு காரியமாகும்!**

இப்படியான சூழ்நிலையில், என்னைப் போன்ற சிலருக்கு,

அதை உடனே சரிசெய்யவோ (fix) அல்லது அங்கிருந்து ஓடிவிடவோ தான் தோன்றும். நாம் அதைச் சரிசெய்ய விரும்புவோம். ‘உங்களுக்கு ஒரு பிரச்சனையா, என்னால் அதைச் சரிசெய்ய முடியும்’ என்றே நினைப்போம்.

சில நேரங்களில், நாம் வலியிலிருந்து விலகி ஓடிவிடவே முற்படுவோம். சில நேரங்களில் நம் உணர்ச்சிகளை உணர்ச்சியற்றுப்போகச் செய்யவே முற்படுவோம். சில நேரங்களில் சமூக ஊடகங்கள் மூலம் நம் கவனத்தைத் திசைதிருப்ப முற்படுவோம்.

ஆனால், இந்தப் பெண்மணிகளை எடுத்துக்கொள்ளுங்கள், இவர்களின் தனித்துவமான நற்பண்பு என்னவென்றால், அவர்கள் கடும் வலியின் மத்தியிலும் அங்கேயே தரித்து நிலைத்திருக்கும் திறன் கொண்டவர்களாகக் காணப்பட்டார்கள் – அவர்கள் தாங்கிக்கொள்ள முடியாத அந்தக் கொடுந்துயரத்திற்குச் சாட்சிகளாக நின்றார்கள். அவர்கள் அந்த இடத்தைவிட்டு நகரவில்லை.



**அவர்கள் தங்கள் அன்புக்குரிய இயேசுவுக்காக அங்கேயே தரித்து நின்றார்கள். இயேசுவின்**

**தாய்க்காக சலோமே துணை நின்றார்; அப்போஸ்தலன் யோவான் அவர்கள் அனைவருக்காகவும் துணை நின்றார்.**

இதிலிருந்து நாம் கற்றுக்கொள்வது என்னவென்றால்,

**மாபெரும் விசுவாசம் என்பது மலைகளை மட்டும் பெயர்ப்பதில்லை,**
**சில நேரங்களில் சிலுவையின் அடியில் உறுதியாக நிற்பதும் மாபெரும் விசுவாசமே!**

இங்கே உள்ள நடைமுறை பயன்பாடு என்ன? இந்த உண்மையுள்ள ஸ்திரீகள் நமக்குச் சில பாடங்களைக் கற்றுக்கொடுக்கிறார்கள். **திடமனமுள்ள பாதுகாப்பாளராகிய 'ஏசர்' என்பவர் உத்தரவு கிடைத்து, பின் உணர்வடைந்து செயல்படுபவராய் இருக்க மாட்டார். மாறாக, ஒரு 'ஏசர்' தன் பொறுப்பினை உணர்ந்து தானே மனமுவந்து உடனடியாகச் செயல்படுபவராக இருப்பார்.**

தன் குமாரனாகிய மோசேக்காக ஒரு சிறு பெட்டியை உருவாக்கி, பொறுப்புடன் செயல்பட்ட யோகெபேத் செய்த செயலுக்குப் பின்னால், வல்லமைவாய்ந்த விசுவாசமும், எகிப்தின் மகா வல்லரசுக்கு எதிராக நிற்பதற்கான 'தானே பொறுப்பெடுத்துச் செயல்படும் மனஉறுதியும்' அவசியம் தேவைப்பட்டிருக்க வேண்டும். இந்த யுகத்தின் முடிவில் இருக்கும் நமது சுவிசேஷ யுக ஏசர்களுக்கு, **இந்த விடாப்பிடியான மனவுறுதி (tenacity) என்பது முதலில் இல்லத்தில் தொடங்க வேண்டியுள்ளது, இல்லத்தில் தொடங்கிய பின்னரே அது சபைக்குள் வழிந்தோட முடியும் சகோதர சகோதரிகளே!**

இதுவே மலைப்பிரசங்கத்தின் (Beatitudes) பாடம் என்று நான் நினைக்கிறேன். முதல் ஐந்து அல்லது ஆறு ஆசீர்வாதங்களில் நீதியின் கொள்கைகளை நாம் உள்வாங்கிக்

கொள்கிறோம். ஆம்! நாம் இயேசுவின் ஒளியைப் பிரதிபலிப் பதற்கும், உப்பாகவும் ஒளியாகவும் இருந்து செயல்படுவதற்கும் முன்பாக, முதலில் மனதில் நீதியின் கொள்கைகளை உள்வாங்கியிருப்பதே அப்பிரசங்கத்தின் நோக்கமாகும்.

இங்கே நாணல்களுக்கு இடையே காணப்பட்ட கண்காணியின் முக்கிய குணாதிசயம் சகித்து நிலைநிற்கும் தன்மையாகும் (endurance).

ஒரு குடும்பத்தில், இது தன் வழிதவறிய பிள்ளைக்காக 10, 20 அல்லது 30 ஆண்டுகள் தளராமல் ஜெபிக்கும் ஒரு தாயைப் பிரதிபலிக்கலாம்.

**அத்தாய் தன் பிள்ளை உலகின் நைல் நதியில் அடித்துச் செல்லப்படுவதைக் கவனிக்கிறாள். உலகின் ஆபத்துகளாகிய கொடிய முதலைகளையும் காண்கிறாள், ஆனாலும் தேவனுடைய வழிநடத்துதல்பேரிலேயே தன் முழு நம்பிக்கை யையும் வைக்கிறாள்; அதே சமயம் சிலுவையின் அடியிலும், நாணல்களுக்கு இடையேயும் ஜெபத்தில் அவள் தன் பிள்ளைக்காய்த் தரித்திருக்கிறாள். அவள் தனது காவல் நிலையை விட்டு விலகுவதில்லை. அவள் ஜாக்கிரதையாக நின்று கவனித்துக் கொண்டிருக்கிறாள். அவள் நச்சரிப்பது மில்லை; விலகிப் போவதுமில்லை. அவள் முதலைகளைக் கண்டு அஞ்சுவதுமில்லை. அவள் தன் ஸ்தானத்தை உணர்ந்தவளாய் ஜெபத்தில் உறுதியோடு தரித்து நிற்கிறாள் – ஆம்! குணசாலியான தாய் அவளே!**

இன்று சுவிசேஷ யுகச் சபையில், யாத்திராகமக் காலத்தில் இருந்தது போலவே, சிலுவையில் தொங்கிய இயேசுவின் வாழ்க்கையில் இருந்தது போலவே, **நமக்கு தேவபக்தியுள்ள பெண்கள் மிக மிக அவசியமாகத் தேவைப்படுகிறார்கள். தனிப்பட்ட ஜீவியத்தில் உண்மையுள்ளவர்களாகவும், சகிப்புத்தன்மை (endurance) கொண்ட குணாதிசயத்தை**

வளர்த்துக் கொண்டவர்களுமான தேவபக்தியுள்ள பெண்கள் நமக்குத் தேவைப்படுகிறார்கள்.

**சுவிசேஷ யுகத்தின் முடிவில் வாழும் என் அன்புச் சகோதரிகளே, நீங்கள் மற்றவர்களுக்குப் பாதுகாப்பான புகலிடமாக இருக்கிறீர்களா?**




சிலுவையின் அடியில் மரியாளுக்குத் துணை நின்ற சலோமே கொண்டிருந்த மனோபலத்தைப் போல,

சபையில் எந்த ஆத்துமாவாவது துக்கத்தில் இருக்கும்போது, அவர்களுடைய வலியில் பங்கடையத்தக்கதாக அவர்களுடன் துணைநிற்பதற்கான மனோபலம் உங்களிடம் இருக்கிறதா?

முதலைகளோ உரோம போர்ச்சேவகர்களோ என ஆபத்துகள் எதுவாயினும், அந்த ஆபத்துகளுக்கு மத்தியிலும் சிலுவையின் அடியில், நாணல்களுக்கு இடையே, தோள் கொடுக்கும் வண்ணமாக "கூடவே இருப்பது / துணை நிற்பது" (presence) என்பதே அந்த ஊழியமாகும்!

மற்றவர்கள் அனைவரும் ஓடிப் போகும்போது, தாங்களும் அஞ்சி ஓடாமல், அங்கேயே கூட இருப்பதன் / துணை நிற்பதன் மூலம் (presence) செய்யும் ஊழியத்தைப்

**பற்றி நமக்கு இந்த உண்மையுள்ள ஸ்திரீகள் தங்கள் முன்மாதிரியான நடக்கைகள் மூலமாகக் கற்றுக் கொடுக்கிறார்கள்.**

இந்த உதாரணங்களிலிருந்து நாம் புரிந்துகொள்வது என்னவெனில், **ஊழியம் என்பது வெறும் வேலை 'செய்வதில்' (doing) மட்டும் இல்லை, அது தோள் கொடுத்து 'கூட துணை நிற்பதிலும்' (being) இருக்கிறது என்பதை நாம் காண்கிறோம்.**

**ஆம்! கூட இருப்பதும், தரித்து நிற்பதும் ஊழியமே!!!**

இப்போது மூன்றாவது ஜோடிக்குச் செல்வோமாக. இவர்களை நாம் மறைமுகமாக வழங்குபவர்கள் (The subversive providers) என்று அழைக்கலாம்.

## 3. மறைமுகமாக வழங்குபவர்கள்

பார்வோன் குமாரத்தியின் செல்வம் மற்றும் அவளுடைய பணிப்பெண் ஆகியவை இங்கு முக்கியத்துவம் பெறுகின்றன, மேலும் இந்த இணைக்கு ஒப்பிடக்கூடிய புதிய ஏற்பாட்டு ஜோடி, யாரெனில், யோவன்னாளும் சூசன்னாளும் ஆவார்கள் – இவர்கள் இருவரும் கொடையாளிகள் (patrons) என்று நான் நினைக்கிறேன்.

சரி, இங்கே கேள்வி ஒன்றினைக் கேட்க ஆசைப் படுகிறேன். மோசேயைத் தண்ணீரிலிருந்து வெளியே தூக்கியது யார்? .... ஆம்! பார்வோனின் குமாரத்தி! அவள் வேறு யாருமல்ல பிள்ளைகளைக் கொல்ல சொன்ன அந்த எதிரியின் மகளாவாள்! அடுத்து, பார்வோன் குமாரத்தி மோசேயைத் தண்ணீரிலிருந்து தூக்கி வெளியே எடுத்து வருவதற்கு உதவியது யார்? .... ஆம்! பார்வோன் குமாரத்தியின் பணிப்பெண்!

இங்கே பார்வோனின் குமாரத்தி நம்பமுடியாத ஒரு காரியத்தைச் செய்கிறாள்.



அவள் எபிரேய குழந்தை ஒன்றினைப் பார்க்கிறாள். அவள் தன் தந்தை ஆணையிட்ட கட்டளையைக் குறித்து அறியாமல் இருந்திருப்பாள் என்று நம்மால் சொல்ல முடியாது. இந்தக் குழந்தை சாகடிக்கப்பட வேண்டிய ஒன்று என்பது அவளுக்குத் தெரியும். ஆனால் அவள் தனக்குள்ள சிறப்புரிமையையும், தனது அந்தஸ்தையும் பயன்படுத்திக்கொள்கிறாள், தன் தந்தை யாரைக் கொல்ல விரும்பினாரோ அதே எபிரேய குழந்தையை, அவரிடமிருந்தே காப்பாற்ற, தன் தந்தையின் செல்வத்தையே பயன்படுத்துகிறாள்!!! வினோதத்திலும் வினோதம்!

அது மட்டுமல்ல! பார்வோனின் குமாராத்தி மோசேயைப் போஷித்து வளர்ப்பதற்கு, அவரைப் பெற்றெடுத்த தாயாகிய யோகெபேத்திற்கே ஊதியம் கொடுக்கிறாள். இந்த முரண்பாட்டை (irony) உங்களால் உணர முடிகிறதா?

எகிப்தின் இராஜா இஸ்ரயேலரை விடுவிக்கப்போகும் இரட்சகனைக் கொல்லும்படிக்கு மரண தண்டனை விதித்தான். எகிப்தின் குமாரத்தியோ அந்த இரட்சகனின் உயிர் காக்கப்

படுவதற்கு பணம் கொடுத்தாள்! சொல்லப்போனால் எகிப்து பேரரசு தனது சொந்த அழிவிற்கே நிதியுதவி அளித்துக் கொண்டிருந்தது! எகிப்தை மண்டியிடச் செய்வதற்கு, தேவனுடன் இணைந்து செயல்படப் போகும் அதே மனிதனை வளர்ப்பதற்கு அந்த எகிப்தின் செல்வமே பயன்படுத்தப்பட்டது! **ஆம்! அதுதான் தேவனுடைய வல்லமை என்பது! அதுதான்... விந்தையிலும் விந்தையான தேவனுடைய வல்லமை என்பது!**

இங்கே பார்வோன் குமாரத்தியின் குணாதிசயத்தையும் நம்மால் பார்க்க முடிகிறது. பார்வோனின் குமாரத்திக்கு இரக்கமுள்ள இருதயம் காணப்பட்டது, அந்த இரக்கமுள்ள இருதயம் அவளுடைய அரசியல் ஆதரவை விடவும் மேலோங்கி நின்றது. **யாத்திராகமம் 2:6** – ஆம் வசனத்தை வாசிக்கையில், அவள் நாணற்பெட்டிக்குள் அழுதுகொண்டிருந்த ஒரு குழந்தையைப் பார்த்ததாகவும், "**அவள் அதின்மேல் இரக்க முற்றதாகவும்**" வேதவாக்கியம் தெரிவிக்கிறது. **என்னதான் தேவன் அவளுடைய ஸ்தானத்தைப் பயன்படுத்திக் கொண்டாலும், அவளுடைய இரக்கமான இருதய சுபாவத்தின் மீது அவருக்கு நம்பிக்கை இருந்தது.**

இப்போது இயேசுவின் ஊழியத்திடம் வரலாம். இயேசுவின் ஊழியம் எவ்வாறு ஆதரித்து (உதவப்பட்டு) நிலைநிறுத்தப்பட்டது என்பதைப் பற்றி நாம் அடிக்கடி யோசித்துப் பார்ப்பதில்லை. அது அற்புதமான வகையில் நடத்தப்பட்டது என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. ஆனால் நடைமுறையில் எவ்வாறு ஆதரித்து நிலைநிறுத்தப்பட்டது? என்னென்ன நடைமுறை வழிமுறைகள் காணப்பட்டன? **லூக்கா 8 – ஆம் அதிகாரம், 1 முதல் 3 வரையிலான வசனங்கள்** கர்த்தருடைய ஊழியத்தின் பொருளாதாரப் பின்னணியைக் குறித்து நமக்குத் திரையை விலக்கிக் காட்டுகின்றன என்றே நான் நினைக்கிறேன்; பெண்கள் "**தங்கள் ஆஸ்திகளால் அவருக்கு ஊழியஞ்செய்துகொண்டு**

**வந்தார்கள்" என்று அங்கே நமக்குச் சொல்லப்படுகிறது. அங்கே பட்டியலிடப்பட்டவர்களில் யோவன்னாளும் ஒருவர்.**

யார் இந்த யோவன்னாள்? அவர் ஏரோது அரண் மனையின் நிர்வாகியான கூசா என்பவனுடைய மனைவி என்று **லூக்கா 8:3** – ஆம் வசனம் நமக்குச் சொல்கிறது. ஓ! இந்த ஒப்பீட்டை நாம் தவறவிடக் கூடாது.

பழைய ஏற்பாட்டில் தேவனுடைய எதிரியான பார்வோனின் அரண்மனையில் பார்வோன் குமாரத்தி காணப்பட்டாள்.

யோவன்னாளோ புதிய ஏற்பாட்டு எதிரியான ஏரோதுவின் அரண்மனையுடன் தொடர்புடையவளாகக் காணப்பட்டாள். இந்த இரண்டு பெண்களுமே உயர்குடி அந்தஸ்து கொண்டவர்கள். அவர்கள் அதிகாரத்தோடு தொடர்புடையவர்கள், ஐசுவரியங்கள் கொண்ட ஸ்திரீகள்; "**அவர்கள் என்ன செய்தார்கள்?**" வேறொன்றுமில்லை **அவர்கள் தேவனுடைய எதிரிக்கு எதிராக ஓர் அமைதியான கிளர்ச்சியில் ஈடுபட்டார்கள்!!! அவ்வளவே!!!**

அவர்கள் பார்வோனின் தங்கத்தையும், ஏரோதுவின் நாணயங்களையும் எடுத்து தேவனுடைய இராஜ்யத்திற்கென்று மறைமுகமாகப் பயன்படுத்தி, அதற்கு உதவினார்கள்.

சொல்லப்போனால், யோவன்னாள் தனது உயிரையே பணையம் வைத்திருந்தாள். ஒருக்கால் தனது காரியக்காரனின் மனைவி யூதர்களின் இராஜாவுக்கு நிதி உதவி செய்கிறாள் என்பது ஏரோதுவுக்கு மாத்திரம் தெரிந்திருந்தால், அவளும் அவளோடு கூட கூசாவும் தேசத்துரோகக் குற்றச்சாட்டிற்கு ஆளாகியிரு ப்பார்கள். ஆனால் அவள் அதையெல்லாம் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை; **அவள் தனது செல்வாக்கும், பணச் சேமிப்பும் தனது சொந்த வசதிக்காக அல்ல என்பதையும், அவை தேவனுடைய இராஜ்யம் வளர்ச்சி அடைந்து முன்னேறிச்**

**செல்வதற்குப் பயன்படுத்தப்பட வேண்டியவை என்பதையும் அவள் புரிந்து வைத்திருந்தாள் என்றே நான் நினைக்கிறேன்.**

**[இந்த முன்மாதிரியை உங்களில் பல சகோதர சகோதரிகளிடம் நான் மிகவும் சம்பூரணமாகக் காண்கிறேன். நீங்கள் செய்துவரும் அந்த ஊழியத்திற்காக உங்களுக்கு எங்களது மனமார்ந்த நன்றி!]**

இந்தப் பெண்கள் உலகின் தங்கத்தை எடுத்து தேவனுடைய மகிமைக்காக மறுபயன்பாடு செய்தார்கள்.

பொருளாதாரப் பொறுப்பு (stewardship) மற்றும் கடமை பற்றி நாம் இங்கே ஒரு நடைமுறைப் பாடத்தைக் கற்றுக் கொள்ளலாம். தைரியமுள்ள பாதுகாப்பாளராகிய 'ஏசர்' என்பவர் உத்தரவு கிடைத்து, பின் உணர்வடைந்து செயல்படுபவராய் இருக்க மாட்டார். மாறாக, ஒரு 'ஏசர்' தன் பொறுப்பினை உணர்ந்து தானே மனமுவந்து உடனடியாகச் செயல்படுபவராக இருப்பார்.

சுவிசேஷ யுகத்தின் முடிவில் இருக்கும் நம் சகோதரிகளுக்கு இது ஒரு மிகச்சிறந்த முன்மாதிரி என்று நான் நினைக்கிறேன். தேவன் நமது தேவபக்தியுள்ள ஸ்திரீகள் பலருக்கும் **செல்வாக்குகளைக்** கொடுத்துள்ளார். நமது கலாச்சார அரண்மனைகளில், உங்களில் சிலருக்குக் கைத்தொழில்களையும், சிலருக்குப் படிப்பறிவு பட்டங்களையும், சிலருக்கு உலக ஆஸ்திகளையும், நிறுவனங்களில் பதவிகளையும் அவர் கொடுத்துள்ளார். **உங்கள் தாலந்துகள் என்பது உங்கள் ஆற்றல்கள் மற்றும் நீங்கள் கொண்டுள்ள வளங்களின் கலவையே ஆகும். ஆனால், அவற்றைப் பெற்றிருப்பது மாத்திரம் போதாது, இங்கே உங்களுக்குத் தேவையான குணலட்சணம் தாராள மனப்பான்மையும், தேவ காரியங்களில் தங்களுக்குரிய பொறுப்புணர்வை உணர்வதுமே ஆகும்.**

**தேவன் நம்மை வெளியரங்கமாகப் பயன்படுத்துவதற்கு முன்பு, தனிப்பட்ட ஜீவியத்தில் நாம் காண்பிக்கும் குணலட்சணமே எப்போதும் முதலிடம் பெறுகிறது.**

இங்கே முக்கியமான விஷயம் என்னவென்றால், யோவன்னாள் ஏரோதுவின் செல்வத்தை, தன் சுயத்தைத் திருப்திப்படுத்த பயன்படுத்தாமல், மாறாக, அவள் அதை இயேசுவுக்குப் பணிவிடை செய்வதற்காகவே பயன்படுத்தினாள்.

ஆக, சுவிசேஷ யுக அறுவடையில் நவீன கால ‘ஏசர்களாக’ இருக்கும் நீங்கள், இன்று இயேசுவின் நோக்கங்களுக்காக எவ்வாறெல்லாம் ஊழியம் செய்து வருகிறீர்கள் என்பதை மனதில் அசைப்போட்டுப் பாருங்கள்!

சில நடைமுறை யோசனைகளைச் சிந்தித்துப் பார்க்கலாம்.

1. **முதலாவதாக, உங்கள் குடும்பத்தை, உங்கள் இல்லத்தை ஞானத்துடன் நிர்வகிப்பதன் மூலமும், ‘நமக்குள்ள அனைத்தும் தேவனுக்குச் சொந்தமானது’ என்பதை உங்கள் பிள்ளைகளுக்கு முன்மாதிரியாக ஜீவித்துக் காண்பிப்பதன் மூலமும் நாம் ஊழியம் செய்யலாம்.**

நான் அறிந்துகொண்ட ஒன்று என்னவென்றால், நாம் மாய்மாலம் செய்தால் பிள்ளைகள் அதை எளிதில் கண்டுபிடித்து விடுவார்கள் – அவர்களிடம் பாசாங்குகளைக் (hypocrisy) கண்டறியும் உள்திறன் உள்ளது என்பதேயாகும். ஒருவகையில், அவர்கள் நாம் நேர்மையாக இருப்பதற்கு உதவுகிறார்கள் என்று கூட சொல்லலாம்; நாம் என்னதான் ஆயிரமாயிரம் வார்த்தைகளைச் சொல்லி, அவர்களைச் செவிமடுக்க வைத்தாலும், அதைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமாக அவர்கள் நாம் செய்வதையே, நம் அசைவுகளையே, நம் கிரியைகளையே உற்று நோக்குகிறவர்களாக இருக்கிறார்கள்!

‘நமக்குள்ள அனைத்தும் தேவனுக்குச் சொந்தமானது’ என்பதை நம் பிள்ளைகளுக்கு முன்மாதிரியாகக் காட்டுவதன் மூலமும், விருந்தோம்பலை / உபசரிப்பைப் பயிற்சி செய்வதன் மூலமும், நம் இல்லத்தைத் திறந்து, அதனை உண்மையில் தேவனுடைய இராஜ்யத்திற்கான ஒரு செயல்பாட்டுத் தளமாக (forward operating base) மாற்றுவதன் மூலமும் நாம் நம் இல்லத்தை ஞானத்துடன் நிர்வகிக்க வேண்டும்.

[பலரும் அதை செய்து வருகிறீர்கள். அதின் பலனை நானும் அனுபவித்திருக்கிறேன்! அதற்கு எனது மனமார்ந்த நன்றிகள்! நாங்கள் பெற்ற உபசரிப்பு, அருகருகே பணியாற்றும் வாய்ப்பு மற்றும் ஒருவரோடொருவர் உரையாடி, அதன் மூலம் உங்கள் ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் தேவனுடைய வல்லமை செயல்படுவதை உணர்ந்தது என நீங்கள் பகிர்ந்தளித்த அனைத்து ஆசீர்வாதத்திற்கும், என் நவீன கால சுவிசேஷ யுக ஏசர்களே, மிக்க நன்றி!]

உங்கள் இல்லமே தேவனுடைய இராஜ்யத்திற்கான ஒரு செயல்பாட்டுத் தளமாக மாறுகின்றது. உங்கள் உணவருந்தும்



மேசையினை, ஒரு பிரசங்க மேடையைப் போலவே, சக்திவாய்ந்த ஒன்றாக உங்களால் மாற்ற முடியும். சுவிசேஷத்தை முன்மாதிரியாக ஜீவிப்பதன் மூலம் (modeled gospel) உங்கள் குழந்தைகளை நல்வழியில் போஷிப்பதற்கு அந்த இடத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம். அதன் மூலமாக உங்கள் பொறுப்பின் கீழுள்ள தேவனுடைய ஆட்டுக்குட்டிகளைப் போஷித்து, உங்கள் பிள்ளைகளின் இருதயங்களை, நற்செய்தியின் விதை ஏற்றுக்கொள்ளப்படுவதற்கேற்ற நல்ல நிலமாக உருவாக்கலாம்.

2. **இரண்டாவது யோசனை, சபைக்கு நவீன கால யோவன்னாள்கள் தேவைப்படுகிறார்கள். விவேகம் மிக்க நீதிமான்களாகிய பெண்கள் நமக்குத் தேவைப் படுகிறார்கள். தனிப்பட்ட விதத்தில் இல்லத்தில் சோதிக்கப்பட்ட பிறகு, "நான் எனது தாலந்துகளை ஊழியத்தை ஆதரிப்பதற்காகப் பயன்படுத்துவேன்" என்று சொல்லும் பெண்கள் தேவைப்படுகிறார்கள். நமது நவீன கால ஏசர்களுக்கு, ஊழியம் என்பது வெறும் ஞாயிறு பள்ளி வகுப்பெடுப்பது மட்டுமல்ல. அது ஊழியத்திற்கு நிதியுதவி செய்வதும், பொருட்களை (logistics) ஒழுங்கமைப்பதும், அறுவடை வேலையாட்களுக்குத் தேவையானவை இருக்கின்றனவா என்பதை உறுதி செய்வதும் கூட ஊழியமே ஆகும்.**

நிர்வாகத் திறமை உங்களிடம் இருந்தால், அது பலம்வாய்ந்த இரகசிய சக்தியாகும். உங்களுக்குப் பணம் ஈட்டும் திறன் இருந்தால், அதுவும் ஓர் இரகசிய சக்தியாகும். ஆனால், இவற்றிலெல்லாம் நீங்கள் முதலில் தனிப்பட்ட வாழ்க்கையில் உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும். உங்களுக்குச் சமைக்கும் திறன் இருந்தால், அதுவும் ஒரு சக்தியாகும். ஒரு 'ஏசர்' தன் கையில் செங்கோல் இருந்தாலும் சரி அல்லது கரண்டி

இருந்தாலும் சரி, எதைக் கொண்டும் அவள் தேவனுடைய வேலையைப் போஷிப்பாள், அதற்கு நிதியுதவி அளிப்பாள் – அவள் தேவனுடைய பணிகளுக்குத் தேவையான ஆற்றலைக் கொண்டு வருவாள்.

அடுத்து நான்காவது ஜோடியைப் பார்க்கலாம். இன்று நாம் பார்க்கப்போகும் கடைசி ஜோடி இவர்கள்தான்.

இந்த ஜோடியை நாம் "உள்ளுணர்வு கொண்ட பாதுகாவலர்கள்" (The Intuitive Protectors) என்றழைக்கலாம்.

## 4. உள்ளுணர்வு கொண்ட பாதுகாவலர்கள்

ஏதோவொரு வகையில் இவர்கள் மிகவும் மர்மமான ஜோடி என்று எனக்குத் தோன்றுகிறது. மற்ற அனைவருக்கும் தெரிவதற்கு முன்பாக, இரத்தத்தையும் மரணத்தையும் கண்ட பெண்கள் இவர்கள்.

ஆம்! பாதுகாப்பாளர் சிப்போராள்! இவள், தைலமிட்ட பெத்தானியா மரியாளோடு ஒப்பிட முடியும் என்று நான் நினைக்கிறேன்!

**யாத்திராகமம் 4** – இல் ஒரு விசித்திரமான கதை உள்ளது. ... என்ன ஆயிற்றென்றால், மோசே மீதியானிலிருந்து எகிப்திற்குச் செல்லும் வழியில் கர்த்தர் அவருக்கு எதிர்ப்பட்டு, அவரைக் கொல்லப்பார்த்தார் (வ. 24), மோசே தன் பிள்ளையின் விஷயத்தில் விருத்தசேதன உடன்படிக்கையைக் கடைப்பிடிக்காத காரணத்தால், அவர் மோசேயையோ கெர்சோமையோ கொல்ல முற்பட்டார்.

இந்தச் சூழ்நிலையில், மாபெரும் தலைவனாகிய மோசே சற்றே செயல்பட மறந்தவராக, உறைந்து போனவராகக் காணப் படுகிறார். ஒருக்கால் அவர் சற்றே குழப்பமடைந்திருக்கலாம். பதிவினை வைத்துப் பார்க்கும்போது அப்படியாகத்தான் தெரிகிறது. ஒருவேளை அவருடைய மனம், கெய்ரோவிற்கு அல்லது எகிப்திற்குச் செல்லும் பாதையில், தனது கடந்த கால பார்வோன் உடனான அனுபவங்கள் மற்றும் அங்கு நடந்துகொண்டிருக்கும் அனைத்து விஷயங்கள் பற்றிய சிந்தனையில் மூழ்கியிருந்திருக்கலாம்.

எவ்வாறாயினும், அவருடைய மனைவி சிப்போராள் உடனே சுதாரித்துச் செயல்பட்டவளாய்க் காணப்படுகிறாள், அவரைக் காப்பாற்ற உடனே துணை நின்றாள். அவள் ஒரு கூர்மையான கல்லை எடுத்து, தன் மகனுக்கு விருத்தசேதனம் செய்து, அந்த இரத்தத்தை மோசேயின் கால்களுக்கு முன்பாக எறிந்து போட்டு, பிறகு அவரிடம், "**நீர் எனக்கு இரத்த சம்பந்தமான புருஷன்!**" என்று கூறினாள்.



இக்காட்சியைச் சற்று கற்பனை செய்து பாருங்கள், இது மிகவும் தத்ரூபமானது, ஒரு சில நிமிடங்களில் நடந்து முடிந்த தீவிரமான காட்சிகளாகும்; இதன் கருத்து என்னவென்றால், மோசே செயல்படத் தட்டுத்தடுமாறியபோது, அவருடைய மனைவி சிப்போராள் உள்ளுணர்வின்படி செயல்பட்டாள். ஓர் உடன் படிக்கைக்கு இரத்தம் அவசியம் என்பதை அவள் உடனடியாக உணர்ந்து, அவரது உயிரைக் காப்பாற்ற விரைவாகச் செயல்பட்டாள். மோசேக்கு அப்போது தெளிவற்றுக் காணப்பட்ட அந்த ஆவிக்குரிய யதார்த்தத்தை "அவள்" உணர்ந்திருந்தாள்.

இப்போது, பல நூற்றாண்டுகளுக்குப் பின்னுள்ள காலத்திற்கு வரலாம், பெத்தானியாவில் இயேசு தம்முடைய சீஷர்களுடன் உணவு மேசையில் அமர்ந்திருப்பதை நாம் காண்கிறோம். அங்கிருக்கும் சூழல் சற்றே பண்டிகை காலத்தைப் போல காட்சியளிக்கிறது. இயேசு மரணத்திலிருந்து எழுப்பிய லாசருவும் அங்கு காணப்படுகிறார், சீஷர்கள் இயேசுவோடும் லாசருவோடும் போஜனம்பண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

அநேகமாக, அந்த விருந்தின் போது இராஜ்யத்தின் மகிமை தொடங்கப் போகிறது என்று அவர்கள் நினைத்திருக்கலாம். நமக்கு உறுதியாகத் தெரியவில்லை.

இதற்கிடையில், பெத்தானியா மரியாளோ, நளதம் என்னும் விலையேறப்பெற்ற தைலமுள்ள வெள்ளைக்கல் பரணியுடன் அங்கு வருகிறாள். இது ஏதோ மலிவான வாசனை திரவியம் அல்ல. இது ஒரு வருட கால ஊதியத்திற்குச் சமான விலையுள்ள தைலமாகும். இது அநேகமாக அவளுடைய சீதனமாக இருந்திருக்கலாம் (dowry) அல்லது அவளுடைய எதிர் காலத்திற்காக வைத்திருந்த மொத்த தொகையாகக்கூட இருந்திருக்கலாம். (நமக்குத் தெரியாது!)

இப்படியாக, அமைதியாக வந்த அவள் அதை உடைத்து,

இயேசுவின் பாதங்களில் ஊற்றிவிடுகிறாள், அந்த நறுமணம் வீடு முழுவதும் நிறைந்து வழிந்தது.

யூதாசோ இது வீண் விரயம், இதை விற்றிருக்கலாம், இது பொறுப்பற்ற செயல் என்றெல்லாம் குழப்பத்தோடு முறுமுறுத்து குறை கூறிக்கொண்டிருந்தான். ஒருவேளை அங்கிருந்த மற்ற சகோதரர்களும் குழப்பமடைந்திருக்கலாம்.

எப்பேர்ப்பட்ட வளங்கள் இப்படி வீணடிக்கப்படுகிறதே என்று அவர்கள் எண்ணினார்கள். ஆனால் இயேசு என்ன சொன்னார்? “ஆ! போதும்! அவளை விட்டுவிடுங்கள். நான் அடக்கம் பண்ணப்படும் நாளுக்காக இதை வைத்திருந்தாள்” என்று கூறினார். சிப்போராளுக்கும் தைலமிட்ட மரியாளுக்கும் இடையிலான தொடர்பை இங்கே உங்களால் காண முடிகிறதா? சிப்போராளைப் போலவே, பெத்தானியா மரியாள் மட்டுமே அந்த



அறையில் அந்த நேரத்தின் முக்கியத்துவத்தை அறிந்திருந்தாள். உடன்படிக்கைக்கு இரத்தம் தேவை என்பதை அவள் அறிந்திருந்தாள்.

ஒருபுறம் பேதுரு கர்த்தருக்காக சண்டையிடுவதாக உறுதியளித்துக் கொண்டிருந்தார், ஒருபுறம் யூதாஸ் நாணயங்களை

எண்ணிக் கொண்டிருந்தான். ஆனால், அன்பு மரியாளோ இயேசுவின் சரீரத்தைச் சிலுவைக்காக ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தாள். ஆச்சரியம்! அவள் வெளியரங்கமாகப் பயன்படுத்தப்படுவதற்கு முன்பே, தனிமையில் / தனிப்பட்ட ஜீவியத்தில் உண்மையுள்ளவளாக இருந்துள்ளாள்!

அவளிடம் ஓர் ஆவிக்குரிய உள்ளுணர்வு இருந்தது. இரட்சகரின் பாடுகளை அவள் உணர்ந்திருந்தாள், மற்ற அனைவரும் அதைக் காணாதபோது, அவள் இயேசுவின் பாதத்தில் அமர்ந்து நற்செய்தியைக் கேட்டுக்கொண்டிருந்தாள்.

மரியாளுக்கு இக்காரியம் குறித்து எப்படித் தெரிந்தது? கர்த்தருடைய இறுதி நேரத்தின் முக்கியத்துவத்தை மரியாள் எப்படி அறிந்திருந்தாள்? வேறொன்றுமில்லை அது அவளுடைய குணலட்சணத்திலேயே காணப்பட்ட ஒன்று என்று நான் நினைக்கிறேன்.

இதுகுறித்து **லூக்கா 10** – ஆம் அதிகாரம் நமக்கு என்ன சொல்கிறதெனில், "**மார்த்தாளோ பற்பல வேலைகளைச் செய்வதில் மிகவும் வருத்தமடைந்தபோது, மரியாள் இயேசுவின் பாதத்தருகே அமர்ந்து, அவருடைய வசனத்தைக் கேட்டுக்கொண்டிருந்தாள்.**"

இங்ஙனம் அவள் லூக்கா 10 – ஆம் அதிகாரத்தில் அவருக்குச் செவிசாய்த்துக் கொண்டிருந்ததால்தான், அவளால் யோவான் 12 – ஆம் அதிகாரத்தில் கர்த்தருடைய இறுதி நேரத்தின் முக்கியத்துவத்தை அறிந்துகொள்ள முடிந்தது என்று சொன்னால் அது மிகையாகாது!

அவளுடைய அந்த உள்ளுணர்வே ஒரு பயன்தரும் கனியாக இருந்தது. அது அவள் கர்த்தரோடு கூட இருந்து (presence) அவர் சொல்வதைக் கூர்ந்து கவனித்துக்

**கேட்டதினிமித்தம் உண்டான கனியே ஆகும். இதை வைத்துப் பார்க்கையில், மரியாள் செயல் வீராங்கனையாக மாறுவதற்கு முன்பே, வார்த்தைக்குக் கீழ்ப்படியும் பெண்ணாக (**woman of the word**) காணப்பட்டாள் எனக் காண்கிறோம்.**

## சில நடைமுறை யோசனைகள்

இப்போது, நான் உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்பும் நடைமுறை யோசனைகள் சில உள்ளன. இதை 'உள்ளுணர்வு எனும் கோட்பாடு' (Theology of Intuition) என்றழைப்போம். என்னவெனில், **நீங்கள் வேதவசனங்களுக்குக் கீழ்ப்படிந்து அதனைச் சரியாகப் பயிற்சி செய்து வருவீர்களேயானால், நவீன கால 'ஏசராக,' நவீன கால தைரியமுள்ள பாதுகாப்பாளராகச் செயல்படும் வாய்ப்புகளைத் தேவன் உங்களுக்கு வழங்குவார். இந்த 'ஏசர்' உத்தரவு கிடைத்து, பின் உணர்வடைந்து செயல்படுபவராய் இருக்க மாட்டார். மாறாக, மனமுவந்து தன் பொறுப்பினை உணர்ந்து தானே உடனடியாகவும் உண்மையுள்ளவராகவும் செயல்படுபவராக இருப்பார்.**

**நீதிமொழிகள் 31:10** – ஆம் வசனம், "**குணசாலியான ஸ்திரீயைக் கண்டுபிடிப்பவன் யார்? அவளுடைய விலை முத்துக்களைப்பார்க்கிலும் உயர்ந்தது**" என்று கூறுகிறது.

பிறகு **16 – ஆம் வசனத்தில்** ஒரு சுவாரஸ்யமான விஷயம் சொல்லப்பட்டுள்ளது: "**ஒரு வயலை விசாரித்து அதை வாங்குகிறாள்; தன் கைகளின் சம்பாத்தியத்தினால் திராட்சத்தோட்டத்தை நாட்டுகிறாள்.**"

ஆம்! இன்று இது நமக்குத் தேவை என்றே நான் நினைக்கிறேன். அதாவது, தனிப்பட்ட ஜீவியத்தில் இருக்கும் இந்த உண்மையுள்ள தன்மை நமக்குத் தேவைப்படுகிறது.

**நமது நவீன கால 'ஏசரின்' பக்தி வாஞ்சை பொங்கி வழிவதற்கும், நமது பரலோகத் தந்தைக்கும் அவருடைய ஜனங்களுக்கும் பணிவிடை செய்து அவரைப் பிரியப் படுத்துவதற்கும் ஏதுவாக, இந்த 'தாமே முன்வந்து செயல் படும் சுபாவம்' மற்றும் 'திட்டமிட்டுச் செயல்படும் ஞானம்' ஆகிய குணநலன்கள் என்றென்றும் வற்றாத ஊற்றாக அவர்களுக்குள் ஊறிக்கொண்டே இருக்க வேண்டும்.**

நான் ஒரு சகோதரனாக தலைமை பொறுப்பேற்று ஊழிய வேலைகளில் ஈடுபடும்போது, சில நேரங்களில் நான் குழுக்கள், திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகளால் மிகவும் பிஸியாகிவிடுவேன்; சில நேரங்களில் தேவனுடைய இதயத்துடிப்பை நான் தவறவிட்டு விடுகிறேன்.

ஆக, என்ன சொல்ல வருகிறேனெனில், பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலை உணர்ந்துகொள்ளும் உள்ளுணர்வு உள்ளவர்களாக இருந்த சிப்போராள் மற்றும் மரியாளைப் போன்ற பெண்கள் நமக்குத் தேவைப்படுகிறார்கள் என்பதேயாகும். **நமது குடும்பத்தில் - இது ஆவிக்குரிய பகுத்தறியும் உள்ளுணர்வைக் (spiritual discernment) குறிப்பதாக உள்ளது.**

தாய்மார்களே! உங்களுக்கு இந்த உள்ளுணர்வைக் (motherly instinct) குறித்து தெரிந்திருக்கும்.

நீங்கள் உங்கள் பிள்ளையைப் பார்ப்பீர்கள். அந்தப் பிள்ளை "பிரச்சினை எதுவும் இல்லை மா, எல்லாம் சரியாக உள்ளது!" என்று சொல்லலாம். ஆனால் உங்கள் உள்ளுணர்வு, "இல்லை! ஏதோ சரியில்லை, கண்டிப்பாக ஏதோ சரியில்லை" என்பதை பலமாய் உணர்த்தும். தன் பிள்ளையின் இருதயத்தில் ஏதோ சரியாக இல்லை என்பதை அந்தப் பிள்ளை தானே

உணர்ந்துகொள்வதற்கு முன்பே அல்லது வாய் திறந்து சொல்வதற்கு முன்பே ஒரு தாயானவள் பெரும்பாலும் முன்கூட்டியே உள்ளுணர்வில் அறிந்துவிடுவாள். தாய்மார்களுக்கே உரிய சக்தி இது!

ஒரு நவீன கால 'ஏசர்,' தனது கணவன் ஆவிக்குரிய தாக்குதலுக்கு உள்ளாகும்போது, அவர் அதை ஒப்புக் கொள்வதற்கு முன்பே அதை அறிந்துவிடுவாள். **ஆம்! ஒரு நவீன கால ஏசர் அந்த உள்ளுணர்வை (intuition) நம்ப வேண்டும். வேதவசனங்களின் பக்கங்களிலிருந்து பரிசுத்த ஆவி உங்கள் உள்ளுணர்வில் பேசும் அந்த மெல்லிய சத்தத்தை ஒருக்காலும் புறக்கணிக்காதீர்கள் சகோதரிகளே! அது மெல்லிய சத்தமல்ல, மாறாக பாதுகாப்பின் கர்ஜனையாகும்!** அது உங்கள் குடும்பத்தை இயேசுவின் இரத்தத்தால் மூடுவதற்கு, அந்தக் கருக்கான கல்லை (flint) எடுப்பதற்கான அல்லது ஜெபத்தில் மன்றாடிப் போராடுவதற்கான பரிசுத்த ஆவியின் தூண்டுதலாக இருக்கலாம்; **ஆம்! உங்கள் கணவனோ பிள்ளையோ தனக்காய்த் தானே ஜெபிக்க முடியாத அளவுக்குப் பலவீனமாக இருக்கும்போது, அவர்கள் நிமித்தம் நீங்கள் ஜெபத்தில் மன்றாடிப் போராடுவதற்கான பரிசுத்த ஆவியின் தூண்டுதலாக அது இருக்கலாம்.**



**இப்படியாக பார்க்கும்போது, நமது சபைகளில், செயல் படுவதை விடவும் முதலில் தீவிரமாக உற்றுக்கவனிக்கும்**

**பெண்கள் நமக்குத் தேவைப்படுகிறார்கள் என்று சொல்லலாம். வேதவாக்கியங்களில் சொட்ட சொட்ட ஊறிக்கிடக்கும் பெண்கள் நமக்குத் தேவை; இதன் மூலமாக அவர்களால் தவறான உபதேசங்களையோ அல்லது ஆவிக்குரிய மந்தநிலையையோ வெகுதொலைவிலிருந்தே உணர முடியும். இயேசு பிரியப்படும் அந்தவொரு காரியத்தைச் செய்வதற்காய், உலகின் கண்களுக்கு முன்பாகவும் சரி அல்லது மற்ற பின்னடியார் களின் கண்களுக்கு முன்பாகவும் சரி, தான் முட்டாளாகத் தெரிவதைக் கண்டு, அஞ்சி பின்வாங்காத பெண்கள் நமக்குத் தேவைப்படுகிறார்கள்.**

வெளியரங்கமாக அவருக்காக ஒரு காரியத்தை/ஊழியத்தை நீங்கள் கையாளவும் செயல்படுத்தவும் வேண்டும் என்பதற்காக, இயேசு தனிமையில் உங்களை ஆயத்தப்படுத்திய அந்தவொரு காரியம் என்ன? அவரவர் தங்களைத் தாங்களே நிதானித்துப் பார்ப்போமாக.

**இராஜாவின் பாதங்களுக்குத் தைலமிட வேண்டும் என்பதற்காக, தங்கள் கௌரவம், தங்கள் எதிர்காலம், தங்கள் நற்பெயர் ஆகிய அந்த நளத தைல வெள்ளைக்கல் பரணிகளை உடைப்பதற்கு ஆயத்தமாய்க் காணப்படும் நவீன கால 'ஏசர்களே' நமக்குத் தேவைப்படுகிறார்கள்!**

## முடிவுரை

எனவே முடிவாக, மீட்பின் கட்டமைப்பாளர்களின் பெயர்ப் பட்டியலை மீண்டும் ஒருமுறை பார்த்துவிடலாம்.

* சிப்பிராள், பூவாள், யோகெபேத், மிரியாம், பார்வோனின் குமாரத்தி, அவளுடைய பணிப்பெண் மற்றும் சிப்போராள்.

* மகதலேனா மரியாள், கிலெயோப்பா மரியாள், இயேசுவின்

தாயாகிய மரியாள், சலோமே, யோவன்னாள், சூசன்னாள் மற்றும் பெத்தானியா மரியாள்.

ஆம்! 14 பெண்கள்! நியாயப்பிரமாண உடன்படிக்கையின் தொடக்கத்தில் 7 பேர். கிருபையின் உடன்படிக்கையின் தொடக்கத்தில் 7 பேர்.

ஏதேன் முதல் எகிப்து வரை, பெத்லகேம் முதல் கல்லறை வரை, அந்தந்த தருணத்திற்குத் தேவைப்பட்ட பலத்தை வழங்கிய ஏசர்கள் (Ezers) இல்லாமல் – அந்தப் பெண்கள் இல்லாமல் – தேவன் ஒருபோதும் தம்முடைய இராஜ்ய பணியை முன்னோக்கி நகர்த்திக் கொண்டு செல்லவில்லை.

அந்த இரகசியம் என்னவெனில், **நெருக்கடி வருவதற்கு முன்பே தேவன் ஏசர்களை அழைக்கிறார். நெருக்கடி.... வருவதற்கு.... முன்பே.... தேவன்.... ஏசர்களை.... அழைக்கிறார்.** எப்படி? **எப்படியெனில், அவர்கள் ஏற்கெனவே தனிமையில் கட்டமைக்கப்படுகிறார்கள்.**

மேலும், இந்த ஏசர்களைப் பற்றி ஒரு விஷயத்தைக் கவனியுங்கள், அவர்கள் பாரம்பரிய ஆயுதங்களைப் பயன்படுத்த வில்லை. அவர்கள் பட்டயங்களையோ, ஈட்டிகளையோ, சட்டங்களையோ பயன்படுத்தவில்லை.

அவர்கள் மீட்பின் கட்டமைப்பையே பயன்படுத்தினார்கள். அவர்கள் கூடைகளைப் பயன்படுத்தினார்கள். அவர்கள் துண்டுகளைப் பயன்படுத்தினார்கள். அவர்கள் நறுமண தைலங்களைப் பயன்படுத்தினார்கள். அவர்கள் தங்கள் பணச் சேமிப்புகளைப் பயன்படுத்தினார்கள். அவர்கள் தங்கள் கண்ணீரைப் பயன்படுத்தினார்கள்!

உலகப் பேரரசோ பயம் கிலி திகில் எனும் செங்கற்களைக் கொண்டு தன்னைக் கட்டுவிக்கிறது! ஆனால் தேவனுடைய

இராஜ்யமோ விசுவாசம் மற்றும் தியாகங்களைக் கொண்டே கட்டப்படுகின்றது!

எனவே, சுவிசேஷ யுகத்தின் முடிவில் எங்களோடுகூட நின்று கொண்டிருக்கும் எனதருமை சகோதரிகளே!

உலகம் நெருக்கடிக்குள்ளாகி வருகிறது, அந்தகார நிழல்கள் பெரிதாகி வருகின்றன. மாபெரும் மோசே நம்மை பரம இல்லத்திற்குள், தேவனுடைய இராஜ்யத்திற்குள் உட்பிரவேசிக்கும்படியாக நம்மை வழிநடத்தி அழைத்துச் செல்வதற்காக நாம் காத்திருக்கிறோம். இந்த இறுதி நாட்களில் இயேசு தம்முடைய சபையைப் பார்க்கும்போது, அந்த ஏழு ஸ்திரீகளை, அந்த ஏசர்களைப் போன்றவர் களையே தேடித் தெரிந்துகொண்டு வருகிறார். ஆனால் நினைவில் கொள்ளுங்கள், அவர் முதலில் குண லட்சணத்தையே எதிர்பார்க்கிறார். அவர் ஒருவருக்கு வெளியரங்கமாகச் செயல்பட அதிகாரத்தை / சக்தியை வழங்குவதற்கு முன்பு, தனிமையில் உண்மையுள்ளவர்க ளாகவும் அமரிக்கையாகவும் இருக்கும் பெண்களையே நாடி வருகிறார். தங்கள் வீடுகளில் ஜீவனை வளர்ப்பதன் மூலம் மரணத்தின் கலாச்சாரத்தை எதிர்ப்பவர்களை அவர் நாடிக்கொண்டிருக்கிறார், மேலும் நெறிந்த நாணலைப் போல பலவீனமானவர்களையும் கைவிட மறுத்து, அவர்களுக்காக துன்பத்தின் நாணல்களுக்கு மத்தியில் காவல் இருப்பவர்களையே அவர் நாடிக்கொண்டிருக் கிறார்.

தியாகம் நிறைந்த உக்கிராணத்துவ பொறுப்புணர்வின் மூலம் இறுதி அறுவடைக்கு, அதாவது சுவிசேஷ அறுவடைக்குத் தேவையான தாலந்துகளை/வளங்களை வழங்குபவர்களையே அவர் தேடிக்கொண்டிருக்கிறார்.

அவருடைய பாதத்தில் அமர்ந்து அவருடைய இருதயத்தை அறிந்துகொண்ட பிறகு, தங்கள் புத்தியுள்ள ஆராதனையினால் அவருக்கு நளத தைலமிடுபவர் களையே அவர் தேடிக்கொண்டிருக்கிறார்.

அன்புச் சகோதரிகளே, தேவனுடைய மீட்பின் திட்டத்தில், நீங்கள் ஏதோ கடைசியாக போனால் போகட்டும் என்று சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள் அல்ல. மாறாக, நீங்களே அந்த மீட்பின் திட்டத்தின் கட்டமைப்பாளர்கள்! தங்களுக் கென்று தேவன் அருளிய பொறுப்பு ஸ்தானத்தை விட்டு அகலாமல் உறுதியாக நின்ற பெண்களின் நீண்ட பரம்பரையில் இருந்து நீங்கள் வந்தவர்கள், அவர்களுடன் நீங்கள் ஆவிக்குரிய ரீதியில் இணைக்கப்பட்டிருக்கிறீர்கள்! நீங்களே இந்தச் சுவிசேஷ யுக அறுவடையின் ஏசர்கள்! நீங்களே அந்தத் தைரியமுள்ள பாதுகாப்பாளர்கள்! நீங்களே அந்த மீட்பின் கட்டமைப்பாளர்கள்!

வாருங்கள் சகோதரிகளே! வந்து அந்த வரிசையில் தங்களுக்கான பொறுப்பில் அடியெடுத்து வையுங்கள். பார்த்துக்கொள்ளலாம்! நம் அன்புக்குரிய இராஜா நம் முன் செல்கிறார், உத்தமனுக்கு (நல்லோருக்கு) யேகோவா துணை!

(ஆமென்!)

----------------------

(பின்னிணைப்பு: “Poems of Dawn” – இலிருந்து எடுக்கப்பட்ட சில பயன்தரும் கவிதைகள் அடுத்து வரும் பக்கங்களில் காண முடியும்)

# பெண்ணின் ஊழியம்

பெண்ணின் உரிமைகள் – அவை யாவை?
அன்புகூர்ந்து கிரியைபுரிந்து ஜெபிக்கும் உரிமை;
அழுபவர்களுடன் சேர்ந்து அழும் உரிமை,
மற்றவர்கள் அசந்து தூங்க விழித்தெழும் உரிமை.

சிந்தும் கண்ணீரைத் துடைக்கும் உரிமை,
சீறி எழும் பயத்தை அடக்கும் உரிமை;
நம்பிக்கையற்ற நிலையில் ஆறுதல் கூறி,
நல்விசார பாரத்தைத் தணிக்கும் உரிமை

பிரியும் மூச்சை கவனிக்கும் உரிமை,
தேற்றியே மரணத்தில் உற்சாகம் ஊட்டும் உரிமை;
உலக நம்பிக்கை எல்லாம் கைவிடுகையில்,
திரைக்குள் இருப்பதை நோக்கச் செய்யும் உரிமை.

அலைந்து திரிபவரைச் சீர்ப்படுத்தி, தொலைந்தவரை
அவமானப் பாதையிலிருந்து மீட்கும் உரிமை;
ஆதரவற்றவரையும் விதவையையும்,
தயவாய்த் தேற்றி ஆசீர்வதிக்கும் உரிமை.

உண்மை விசுவாசத்துடன் சிறு பிள்ளைகளை,
நமக்காய் ஜீவன் விட்ட அவரிடம் நடத்தும் உரிமை;
ஊக்கமான அன்பும் கனிந்த பாராட்டும்
அவர்கள் வாலிப காலத்தை மகிழ்வித்து ஆசீர்வதிக்குமே.

அறிவுபுகட்டிப் பயிற்றுவித்தே, மேலான நோக்கத்திற்கு
நேராய்ச் சிந்தையை வழிநடத்தும் உரிமை;
அதனைப் பூமியின் பொம்மைகளை விட்டு உயர எழும்பி,
பரம சந்தோஷம்மேல் இருதயத்தை நிலைநிறுத்தும் உரிமை.

நீ நேசிக்கும் அவருக்காய் வாழும் உரிமை,
நிரூபிக்க அதற்காய் மரிக்கும் உரிமை;
மகிழ்வான புன்னகையுடன், கனிவான குரலுடன்
பூலோக வீடுகளைப் பிரகாசமாக்கும் உரிமை.

இவை உமது உரிமைகளாயின், உபயோகிப்பீர் நன்றாகவே;
இப்பரிசுத்த செல்வாக்கை விவரிக்க இயலாதே;
இவை உம்முடையதெனில் – இன்னும் கேட்பதேனோ?
பதில்தர வேண்டிய பொறுப்புகள் ஏராளம் உனக்குண்டே!

உமதுரிமை இவையெனில், இவைதான்
என் விதியா எனக்கான பங்கா என முறுமுறுக்காதே;
உனக்கு தேவன் தந்த தாலந்துகளை வளர்த்திடுவாயே;
இங்கே உன் கடமை முடிந்ததும்,
அங்கே பரத்தினில் உன் இளைப்பாறுதலே!

## மெய்யழகு!

அழகன்றோ கரங்கள் அழகன்றோ
உண்மை உன்னத நற்பணிகளைச் செய்திடும் கரங்கள் அழகன்றோ;
அழகன்றோ கரங்கள் அழகன்றோ
நித்தம் பிறருக்காக உழைக்கும் கரங்கள் அழகன்றோ;
அழகன்றோ முகங்கள் அழகன்றோ –
எந்த நிறமெனினும், இன்னொளி வீசும் முகங்கள் அழகன்றோ;
பரமனின் பார்வையில் – அழகன்றோ மெய் அழகன்றோ
நேர்மையை நேசிக்கும் உன்னத ஆத்துமாக்கள் மெய்யழகன்றோ!

## "கர்த்தர் உன்னை ஆசீர்வதிப்பாராக!"

நீர் இருப்பது மாதூரமோ அல்லது வெகு நெருக்கமோ,
என்றும் என் அன்பு உம்மோடே இருப்பதை நீர் அறிய வேண்டியே,
உள்ளத்தின் உண்மை வாழ்த்தைத் தெரிவிக்க எண்ணியே,
நேச நண்பனே! ஜெபத்தின் வார்த்தைகளில் ஓயாது தேடினேனே;

உம்மை அரவணைக்க இதைவிட உண்மையான,
பிரியமான வார்த்தையை எங்கும் தேடியும் காண இயலேனே;
நான் கேட்ட எந்தவொரு பாடலும் கவிதையும்,
"கர்த்தர் உன்னை ஆசீர்வதிப்பாராக!" என்பதை விடவும்
இனியதல்லவே!

"கர்த்தர் உன்னை ஆசீர்வதிப்பாராக!" – இவ்வாழ்த்தின் மூலமே
வாழ்வின் சகல நன்மைகளும் உமக்குக் கிடைக்க வேண்டுகிறேனே;
ஏனெனில் தேவன் ஆசீர்வதித்தாலன்றி,
எந்த மகிழ்ச்சியும் உமக்கு உரித்தாகுமோ என் தோழா?

துயரத்தின் காரிருள் உம்மை மூடாதபடி, ஒரு காப்பு வாழ்த்தொலியாய்
"கர்த்தர் உன்னை ஆசீர்வதிப்பாராக!" என்பதை மொழிகின்றேனே;
கர்த்தரே உன்னை ஆசீர்வதிப்பது அவர் சித்தம் எனும்போது,
துக்கம் உன்னை என்றும் வாட்ட இயலுமோ என் தோழா?

## ஆகச்சிறந்த முயற்சிதனை ஈந்திடுவேனே

பராக்கிமச்செயல்கள் நான் செய்திடாமல் போகலாம்;
திரள் மக்கள் காண, மகத்தான காரியங்கள் செய்யாமல் நிற்கலாம்;
ஆயினும், என் அன்றாட ஏற்ற இறக்க எளிய உழைப்பில்தானே,
என் ஆகச்சிறந்த முயற்சிதனை ஈந்திடுவேனே.

பார் வியக்கும் உன்னத ஓவியத்தை நான் தீட்டாமல் போகலாம்;
உலகமே வியக்கும் சிலையினை நான் செதுக்காமலும் போகலாம்;
ஆயினும், சோர்ந்திடாமல் என்றும்
என் ஆகச்சிறந்த முயற்சிதனை ஈந்திடுவேனே.

பேர் புகழ் ஏடுகளில் என் பெயர் இடம் பெற வாய்ப்பில்லையே,
சாதாரண வாழ்க்கை பக்கங்களிலன்றோ அது பதியப் பெற்றுள்ளதே;
ஆயினும், அதே பக்கங்களில் தொடர்ந்து உறுதியுடன் செதுக்குவேனே,
என் முழு முயற்சியை முற்றுமாய் ஈந்திடுவேனே.

நான் செய்வதில் அழகோ பிரம்மாண்டமோ இல்லாமல்
இயலாமல் போகலாமே;
ஆயினும், என் கைகளில் அருளப்பட்ட காரியத்தில்தானே,
முழு பிரயாசத்தை ஈந்த தவறாமல் வெகு கவனமாய் இருப்பேனே;
நிச்சயம் என் முழு முயற்சியை ஈந்திடுவேனே.
நிச்சயம் என் முழு முயற்சியை ஈந்தியே மரிப்பேனே.

## செய்! செய்துகொண்டே இரு!

செலவாகியும் செலவுசெய்தும்! செய்! செய்துகொண்டே இரு –
உன் பிதாவின் சித்தத்தைச் செய்வதே உந்தன் பிறவி பாக்கியமாகுமே;
உன் எஜமானர் முன் சென்ற பாதையும் இதுவன்றோ;
அவர் ஊழியன் நீயும் அதில் செல்ல வேண்டுமன்றோ

செய்! செய்துகொண்டே இரு; அது ஒருக்காலும் வீணாகாதே;
உன் மண்ணுலக இழப்பு விண்ணுலகின் ஆதாயமே;
மனுஷர் செவிசாய்க்காமலும், அன்புகூராமலும் மதிக்காமலும்
போகலாமே;
உன் எஜமானன் உன்னை மதிக்கிறாரே – பின் அம்மனுஷர்
எம்மாத்திரமே?

செய்! செய்துகொண்டே இரு; இவ்வுலகில் போதும் போதும் என்றே!
அவர் உன்னைப் புகழுவாரெனில் – உன் உவந்த இதயத்தைக் கண்டே
அவர் உன்னைத் தேற்றி உற்சாகப்படுத்துவாரெனில்:
அவருக்காகச் செய்யும் எந்த வேலையும் வீண் அல்லவே.

சுற்றியுள்ள மனுஷர் புறம்பான இருளிலே,
மரணத்திற்குப் பின் நம்பிக்கையற்றவர்களாய் அமர்ந்திருக்கையிலே;
கார்மேக இருளையும் பொசுக்கும் ஜோதியாம்,
அஜ்ஜீவதீபம்தனை உயர்த்தி நீ பிடிப்பாயே.

செய்! செய்துகொண்டே இரு; ஒருக்கால் உன் கைகள் தளரலாம்,
உன் முழங்கால் சோர்ந்தே, உன் ஆத்துமாவும் வாடலாம்,
ஆயினும் தடுமாறாதே; நாம் நாடும் பரிசோ
மிக மிக அருகிலே – அது உன்னத இராஜ்யமும் கிரீடமுமாமே!

--------------------------

*(பாட ஆதாரம்: Christian Resources App > Audio Sermons > Chicago Discourses > Todd Alexander > Todd Alexander – The Seven Women Architects Of Redemption From Moses To Jesus)*

BIBLE STUDENTS

Food for New Creature